Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, MAY 24, 2021

திங்கட்கிழமை மே 24, 2021 | ஒளி: 07 கதிர்: 03 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

நாட்டை எப்படிக் காப்பாற்றலாம்?

## ரணில் அறிவுரை



இலங்கையில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த, 3 கோடி தடுப்பூசிகள் அவசியம் எனத் தெரிவித்துள்ள முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எனினும் குறித்த தடுப்பூசிகளை இந்த வருடத்துக்குள் இலங்கைக்குக் கொண்டுவருவதில் அசௌகரியங்கள் உள்ளதால், கொரோனாவைக்

தொடர்ச்சி P2

## ஒற்றைக்காலில் நிற்கிறார் சஜித்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய சஜித் பிரேமதாஸ, பாராளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றும் போது, "எனக்குக் கொரோனா தொற்றினாலும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள மாட்டேன்" எனத் தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2

சஜித்துடன் நெருங்கிப் பழகியவர்கள் யார்?

# கமெரா தொகுதியில் கடும் தேடுதல்



- எங்கிருந்து தொற்றியது? துருவித் துருவிச் சோதனை
- ஆர்ப்பாட்டத்திலிருந்து தொற்றியதாகச் சந்தேகம்
- "தேறி வருகின்றேன்" –முஜிபுர் ரஹ்மான் எம்.பி



தனக்கும் தனது மனைவி ஜலனி பிரேமதாஸவுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதை அடுத்து, தன்னுடன் நெருங்கி பழகியவர்களை தனிமையிலிருக்குமாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## புத்தளம் நகர சபையின் தலைவர் விபத்தில் மரணம்



புத்தளம் நகர சபையின் தலைவர் கே.ஏ.பாயிஸ், விபத்தொன்றில் நேற்று (23) மரணமடைந்தார். அவருடைய ஜனாஸா, வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

டயகமையில்

## பாற்பண்ணை கொத்தணி; 37 பேருக்குத் தொற்று

■ ரஞ்சித் ராஜபக்ஷ

அக்கரப்பத்தனை, டயகம அரச பாற்பண்ணையில் பணியாற்றும் 37 ஊழியர்களுக்கு, கொரோனா வைரஸ் தொற்று நேற்று (23) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி பண்ணையில், முதலில் ஆறு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து, அவர்களுடன் தொடர்பைப் பேணிய 91 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையிலேயே, மேலும் 37 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

தமிழ் புறக்கணிப்பு;

## 'இலங்கை அரசே சீனாவின் ஆசான்'



"தற்போது சமூக ஊடகங்களில் உலாவும் தமிழ் இல்லாத, சிங்களம், சீனம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மட்டும் கொண்ட ஒரு பெயர்ப் பலகையின் படம், ஒரு வருடத்துக்கு முன்பே அகற்றப்பட்டு விட்டது என, சீனத் தூதரகம் எனக்குத் தெரிவித்துள்ளது. எனினும் இதுபற்றி யோசித்துப் பார்த்தால், தமிழ் மொழியைப் புறக்கணிக்க சீனர்கள், இலங்கை அரசிடம்தான் பாடம் படித்துள்ளனர்

தொடர்ச்சி P2

## மின்னல் தாக்கியதில் 17 பேர் பாதிப்பு

### ஒருவரின் நிலை கவலைக்கிடம்

■ எம். கிருஷ்ணா, எஸ்.சுஜிதா, டி.கௌசல்யா



கொட்டகலை, டிரேட்டன் தோட்டத்தில், நேற்று (23) காலை மின்னல் தாக்கியதின் காரணமாக, 17 ஆண்கள் பாதிக்கப்பட்டனர். இவர்கள், கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது என வைத்திய அதிகாரி கணேசன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஒரு பிள்ளையின் தாயான 103 வயதுப் பாட்டி மரணம்

ஒரேயொரு பிள்ளையின் தாயான, 103 வயதுடைய மூதாட்டி ஒருவரும் கொரோனா வைரஸ் தொற்றால் மரணமடைந்துள்ளார். இந்தச் சம்பவம், காலி, ரத்கம வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது. கினிமெல்லகஹ தெற்கைச் சேர்ந்த அவர், கடந்த இரண்டு மாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார். திடீரென காய்ச்சல் கூடியமையால், வீட்டிலேயே அவர், நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

மக்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில்

## ஜூனில் வருகிறது கொவிட்- 19 சட்டமூலம்

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காலப்பகுதியில், பொது மக்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான 'கொவிட் -19 சட்டமூலம்' அடுத்த மாதம் முதல் வாரத்தில், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என, நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். கொரோனா தொற்றுப் பரவல் காலத்தில் செய்துகொள்ள அல்லது கிடைக்கப் பெறாதவற்றை பிற்காலத்திலேனும் பெற்றுக்கொள்வதை, இந்தச் சட்டம் உறுதிப்படுத்துவதோடு, தொற்றுப் பரவல்

தொடர்ச்சி P2

இன்றைய தொற்றுப் பரவல் அதிகரிப்புக்கு

## 'அரசாங்கமே பொறுப்பு'



நாட்டுக்குள் இடம்பெற்றுவரும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளதால், நாளுக்கு நாள், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு, உயிரிழப்போரின் தொகையும் அதிகரித்து வருகின்றதென, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் குற்றம் சுமத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## 'ஒன்றுகூடல்கள் உயிருக்கு ஆபத்து'

ஒருவருக்கொருவர் நெருங்கிப் பணியாற்றுவதால், யாருக்கும் தெரியாமலேயே கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் இடம்பெற வாய்ப்புள்ளதென, தொற்று நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஷன்ன டீ சில்வா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கொழும்புக்குப் பின்னர் கண்டிக்குத் தடுப்பூசி



மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களுக்கான தடுப்பூசி ஏற்றல் பணிகளின் பின்னர், கண்டி மாவட்ட மக்களுக்கான தடுப்பூசி ஏற்றல் பணிகள் முன்னெடுக்கப்படும் என்று, அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய

தொடர்ச்சி P2

## 'மனித உயிர்களே பெறுமதியானவை'



நாட்டின் இன்றைய நிலையில், உயிர்களைப் பாதுகாப்பதற்கு மட்டுமே முன்னுரிமையளிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா, மனித உயிர்களைக் காப்பாற்றினால் மாத்திரமே, ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்றும் எனவே,

தொடர்ச்சி P2

ராஜீவ் காந்தி கொலையாளிகளை

## 'மன்னிக்க முடியாது'



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்களை ஒருபோதும் மன்னிக்க முடியாதென, புதுவை முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள விசேட காணொளி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

பயணத்தடையை


## நீடிப்பதா, இல்லையா? 27இல் முக்கிய தீர்மானம்

- பயணத்தடை தளர்த்தப்படுமே தவிர நீக்கப்படாது
- மதுபானசாலை திறக்கப்படாது
- பொதுமக்கள் ஒன்றுகூடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படாது
- ஒருவர் மட்டுமே வீட்டிலிருந்து வெளியேற வேண்டும்




21ஆம் திகதி வெள்ளிக்கிழமை, இரவு 11 மணியிலிருந்து நாடளாவிய ரீதியில் அமல்படுத்தப்பட்ட பயணத்தடை, செவ்வாய்க்கிழமை (25) அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்பட்டு, அன்றிரவு 11 மணிக்கு மீண்டும் அமல்படுத்தப்படும். "உணவுப்பொருள்கள், ஔடதங்கள், அத்தியாவசியமான பொருள்கள், சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே பயணத்தடை தளர்த்தப்படுகின்றது"

தொடர்ச்சி P2



### பத்திக் வெசாக்கூடு...

கொவிட்19 தொற்று நிலைமை காரணமாக, இம்முறை வீடுகளில் இருந்தவாறே வெசாக் பண்டிகையைக் கொண்டாடுவோருக்கு , பத்திக் கைத்தரி துறைகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சால், 'பத்திக் வெசாக் கூடு' தயாரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள

## தாழமுக்கம் இன்று புயலாக மாறும்

### 3 நாள்களுக்கு மழை தொடரும்; மக்களுக்கு எச்சரிக்கை

வங்காள விரிகுடா கடல் பிரதேசத்தில் நிலைகொண்டிருக்கும் தாழமுக்கம், இன்றைய தினம் (24) புயலாக மாற்றமடையக்கூடுமென, வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன் காரணமாக, எதிர்வரும் சில தினங்களுக்கு வடக்கு அந்தமான் கடல் பிரதேசம், வடமேற்கு வங்காள விரிகுடா கடல் பிரதேசத்தில், கடல் திடீரென கொந்தளிப்புடன் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

துறைமுக நகர சட்டமூல வாக்கெடுப்பு;

## குளறுபடியை ஆராய இரு விசாரணைகள்



கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது, இடம்பெற்றதாகக் கூறப்படும் குளறுபடி தொடர்பில் ஆராய்வதற்காக, இரு விசாரணைகள் நடத்தப்படுவதாக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் பாராளுமன்ற

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கமெரா தொகுதியில் கடும் தேடுதல்

இவ்விருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது நேற்று (23) உறுதியானது. இந்நிலையில், அவ்விருவரும் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைப் பெறுகின்றனர்.

"கடந்தவார சபை அமர்வின் போது, பாராளுமன்றத்துக்கு உள்ளும், சபைக்குள்ளும் சஜித் பிரேமதாஸ, சென்றிருந்த இடங்கள், அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் தொடர்பில், சி.சி. டி.வி கமெரா தொகுதியின் ஊடாகத் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன" என படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

'என்னுடைய மனைவிக்கு கொரோனா தொற்றி இருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அதனையடுத்து, பி.சி.ஆர் பரிசோதனை சனிக்கிழமை (22) மேற்கொள்ளப்பட்டது. அதன்போது, தொற்று உறுதியானது. அதன்பின்னர், எனக்கும் பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்பட்டது. அதில், எனக்கும் கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதியானது. இதனையடுத்து, இவரும் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோம்' எனத் தனது டுவிட்டரில், சஜித் பிரேமதாஸ, நேற்று (23) பதிவிட்டிருந்தார்.

சுகாதாரப் பதுகாப்பு முறைமைகளின் பிரகாரம் செயற்பட்ட எதிர்க்கட்சித் தலைவருக்கு, கொரோனா வைரஸ் எவ்வாறு தொற்றியது என்பது தொடர்பில் தேடியறியும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில், கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு (போர்ட் சிட்டி) சட்டமூலத்துக்கு எதிராக, பாராளுமன்ற சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் இருந்து கொரோனா வைரஸ் தொற்றியிருக்கலாம் என்ற சந்தேகமும் வலுப்பெற்றுள்ளது.

இது இவ்வாறிருக்க, எதிர்க்கட்சித் தலைவருடன் நெருங்கிப் பழகிய, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர், பி.சி.ஆர் பரிசோதனைகளை நேற்றைய தினம் மேற்கொண்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரணில் அறிவுரை

கட்டுப்படுத்த புதிதாகச் சிந்தித்து, புதிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான அவசியம் உள்ளதென்றார்.

இந்தியாவின் அஸ்டாசெனெக்கா தடுப்பூசியின் முதலாவது டோஸை செலுத்திக் கொண்டவர்களுக்கு, இரண்டாவது டோஸ் வழங்கப்பட வேண்டும். எனினும், இரண்டாவது டோஸுக்கான பற்றாக்குறை காணப்படுவதால், அதனைக் கொள்வனவு செய்து மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் தொடர்ச்சியாகத் தடுப்பூசியைச் செலுத்தினாலும், இந்த வருடத்துக்குள் நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் தடுப்பூசியை ஏற்ற முடியாது. எனவே, வைத்திய ஆலோசனைகளைப் பெற்று மேலும் இத்தொற்று பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பொருளாதாரத்தைக் காட்டி மக்கள் உயிரைப் பலிகொடுக்க வேண்டா ம் எனவும் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஒற்றைக்காலில்...

இதேவேளை, ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்திருந்த அவர், "தடுப்பூசிகளை ஏற்றும்போது ஒரு பட்டியல் இருக்கவேண்டும். முதலாவதாக சுகாதார பிரிவினர், அவர்களுக்கு உதவும் பாதுகாப்பு தரப்பினர், வயதானவர்கள் என்ற அடிப்படையில் முன்னுரிமை பட்டியல் உள்ளது. ஆகையால், தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதில்லை என தீர்மானித்தேன்.

வரிசையை மீறி, நான் எப்படி தடுப்பூசியை ஏற்றிக்கொள்வேன். எனக்கு வெட்கம், அச்சம் இருக்கிறது. கொரோனா தொற்றினாலும் பரவாயில்லை, நாட்டு மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி வழங்கப்படுவதற்கு முன்னர், தடுப்பூசியை நான், ஏற்றிக்கொள்ள மாட்டேன் என்றார்.

## 'இலங்கை அரசே சீனாவின் ஆசான்'

போல் தெரிகிறது" என, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், "சட்டத்துக்கு வரைவிலக்கணம் தரும் பொறுப்பைக் கொண்டிருக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்தில், மொழிச் சட்டத்தை மீறும் வகையில், தமிழுக்கு பதில் சீன மொழியை எழுதி, திறன் நூலகத்தைச் சட்ட மா அதிபரே திறந்து வைக்கிறார். இப்போது, எமது எதிர்ப்புகளின் பின்னர் அது மாற்றப்படுவதாக சொல்லப்படுகிறது. ஆனால், நடந்த குளறுபடிக்கு காரணம் யார், சட்ட மா அதிபர் திணைக்களமா, சீனத் தூதரகமா, இலங்கை அரசா"எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

"எங்கள் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. இந்நிலை தொடருமானால், இலங்கை-சீன அரசுகளுக்கு எதிராக நாம் மொழிப் போராட்டத்தை கொழும்பின் தெருக்களிலும் துறைமுக நகருக்குள்ளேயும் சென்று ஆரம்பிக்க வேண்டிவரும் எனக் கூறிவைக்க விரும்புகிறேன்.

தமிழ் மொழியைத் தவிர்ப்பதன் மூலம், நம் நாட்டின் மொழிச் சட்டத்தை சீனர்கள் மீறுகிறார்கள். சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் தவிர்த்த சீன மொழி மட்டும் உள்ள பெயர் பலகைகளும் இந்நாட்டில் உள்ளன. நான்,சீனத் தூதுவரைச் சந்தித்து, இதுபற்றி விளக்கி கூறியுள்ளேன்.

தற்போது துறைமுக நகர் நிர்வாகத்தில் பெரும் பங்கு வகிக்கப் போகும் சீன நிறுவனங்கள், இதுபற்றி மிக கவனமாக இருக்க வேண்டும் எனக் கூறினேன். சீனத் தூதரகத்தில் ஒரு தமிழ் மொழிபெயர்ப்புப் பிரிவை அமைத்து, இலங்கை வரும் சீன நிறுவனங்களின் பெயர் பலகைகளில் தமிழ் மொழியையும் எழுதும் விடயங்களில் ஒத்துழைப்பு வழங்கும்படி கூறினேன்" என்று, மனோ எம்.பி மேலும் தெரிவித்துள்ளார்.

## 'அரசாங்கமே பொறுப்பு'

தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையொன்றை இந்த அரசாங்கம் மேற்கொண்டிருக்காமையே, இன்றைய இந்த நிலைமைக்குக் காரணமென்றும், இந்த நிலைமைக்கு, அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டுமென்றும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் நேற்று (23) ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்துரைத்துள்ள மரிக்கார் எம்.பி, "கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி ஏற்றும் பணிகளை விரைவில் ஆரம்பிக்குமாறு, நாங்கள் பல முறை வலியுறுத்தியிருந்தோம். ஆனால் இந்த அரசாங்கம், தேசிய மருத்துவத்தின் மீது நம்பிக்கை வைத்து, பாணியொன்றின் பின்னால் சுற்றித்திருந்தது. இதனால், இன்று மக்கள் மரணிக்கும் நிலைக்கு வந்துள்ளனர்" என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

"இன்றுள்ள நிலைமையில், நாட்டைத் தற்காலிகமாக முடக்குவதே, தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரே வழியாகும். விசேட வைத்திய நிபுணர்கள் கூறுவதையே, இந்நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். அதனால், அவ்வாறான விசேட வைத்திய நிபுணர்கள் கூறுவதைக் கேட்டு, நாட்டை முடக்க நடவடிக்கை எடுக்குமாறு, அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்" என, மரிக்கார் எம்.பி மேலும் தெரிவித்துள்ளார்.

## பாற்பண்ணை கொத்தணி...

மேற்படி பாற்பண்ணைக்கு அருகில், டயகம சந்திரிகம தோட்டம் காணப்படுவதுடன், அந்தத் தோட்டத்தைச் சேர்ந்த மூவர், பாற்பண்ணையில் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், அவர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாக லிந்துலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி ஜனத் அபேகுணரத்ன தெரிவித்தார்.

மேற்படி பாற்பண்ணையில், சுமார் 700 மாடுகள் காணப்படுகின்றன. அந்த மாடுகளின் நலனைக் கருத்திற்கொண்டு, அருகிலுள்ள பாற்பண்ணைகளில இருந்து ஊழியர்களை வரவழைப்பது தொடர்பில் ஆலோசித்து வருவதாக, பாற்பண்ணையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பாற்பண்ணை மற்றும் சந்திரிகாமம் தோட்டம் என்பவற்றை, மறு அறிவித்தல் வரை முடக்குவது தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

லிந்துலை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், நேற்று பாற்பண்ணைக்குச் சென்றுள்ளதுடன், நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர்.

## நீடிப்பதா, இல்லையா...

என கொவிட்-19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானியான இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்ததுள்ளார்.

25 ஆம் திகதி இரவு 11 மணிக்கு மீளவும் அமுல்படுத்தப்படும். பயணத்தடை மே 28 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்படும். இதேவேளை, 27ஆம் திகதி நிலைமையை கவனத்தில் கொண்டே, 29 மற்றும் 30ஆம் திகதிகளில் பயணத்தடை விதிப்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணத்தடை தளர்த்தப்படும் காலப்பகுதியில் வீட்டிலிருந்து ஒருவர் மட்டுமே வெளியேறவேண்டும். மதுபானசாலைகள், விற்பனை நிலையங்கள் திறக்கப்படாது. அத்துடன் பொதுமக்கள் ஒன்றுகூடுவதற்கும் வாய்ப்பு வழங்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் சட்ட நடைமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறுபவர்களைக் கைது செய்வதற்கான பொலிஸ் தேடுதல் நடவடிக்கைகள், நாட்டின் அனைத்துப் பாகங்களிலும், கடுமையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

## 'ஒன்றுகூடல்கள்...

இது தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று (23) கருத்துத் தெரிவித்துள்ள அவர், இந்த வைரஸ் சில காலங்களுக்கு, சமூகத்தில் இந்த வைரஸ் பரவல் இருந்துகொண்டே இருக்கும். அதனால், அடிக்கடி கொரோனா அலைகள் உருவாகக்கூடும். விசேடமாக, நீங்கள் ஒரு தொற்றாளராக உருவாகுவது, உங்களுக்குத் தெரியாமலேயே இடம்பெறக்கூடும். அதனால், நாம் நம்மைப் பற்றியும் நமது குடும்பத்தைப் பற்றியும், நமது நாட்டைப் பற்றியும் சிந்தித்து, ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தவிர்க்க முடியாத ஒன்றுகூடல்களின் போது, கட்டாயமாகச் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும் என்றார்.

## 'மனித உயிர்களே...

இந்த நேரத்தில் பெறுமதியான மனித வளங்களைப் பாதுகாப்பது அவசியமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர், சமூகத்தில் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களை விட 3 மடங்கு தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கலாம் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளே குறிப்பிடுவதாகவும் தமக்கு இத்தொற்று ஏற்பட்டுள்ளதை அறியாமல் பலர் இருக்கலாம் என்ற நிலைமையிலேயே, இவ்வாறான சிக்கல் தோன்றியுள்ளதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவதாக, பி.சி.ஆர், அன்டிஜன் மூலம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டால், மோசமான நிலைமையின் கீழ் தனிமைப்படுத்தல் நிலையங்களில் அல்லது வைத்தியசாலைகளில் தங்கியிருக்க நேரிடும் என்ற பயம் மக்களை சூழ்கொண்டுள்ளது என்றார்.

## மின்னல் தாக்கியதால்...

தேயிலை மலையில் வேலை செய்துகொண்டிருந்த ஆண் தொழிலாளர்களே, நேற்று (23) முற்பகல் 10.30 மணியளவில் இவ்வனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

குறித்த பகுதியிலுள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தின் மீது மின்னல் தாக்கியுள்ளது. இந்நிலையில் அருகில் வேலை செய்துகொண்டிருந்த ஆண் தொழிலாளர்கள் மீது எரிகாயங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் சிலர் தப்பியோட முற்பட்டு சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில் கொட்டகலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என, திம்புள்ள- பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

## ஒரு பிள்ளையின் தாயான 103 வயது பாட்டி மரணம்

இதனையடுத்து, சடலம் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த அறிக்கையின் பிரகாரம் பாட்டிக்கு கொரோனா தொற்றியிருந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## கொழும்புக்குப்...

ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அந்த வகையில், ரஷ்யாவிலிருந்து அடுத்த வாரம் கிடைக்கவுள்ள, கொரோனா வைரஸுக்கு எதிரான ஸ்பூட்னிக் தடுப்பூசி, கண்டி மாவட்ட மக்களுக்குச் செலுத்தப்படும்.

50 ஆயிரம் ஸ்பூட்னிக் தடுப்பூசிகள், அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளன. மேலும் 1 மில்லியன் தடுப்பூசிகள், அடுத்த மாதம் முதல் வாரத்தில் கிடைக்கவுள்ளன. மேல் மாகாணத்துக்குப் பின்னர், கொரோனா தொற்றுப் பரவல் அதிகமாகக் காணப்படும் மாவட்டமாகக் கண்டி மாவட்டமே காணப்படுகிறது.

கண்டியில் குண்டசாலை, மெததும்பர, பாத்ததும்பர, கண்டி நகரம், கங்கவட்ட கோரலய போன்ற பிரதேசங்களிலேயே, அதிக கொரோனா தொற்றுப் பரவல் காணப்படுகிறது என, சுகாதாரத் தரப்பினரால் கண்டறியப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றல் வேலைத் திட்டமானது, சுகாதாரத் தரப்பினராலும் தொடர்புடைய தொழில் நுட்ப குழுவினராலும் மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

## 'மன்னிக்க முடியாது'

அதில் நாராயணசாமி மேலும் கூறியுள்ளதாவது,

"ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது. மேலும், இந்தச் சந்தேகநபர்கள் சிறையில் உள்ளனர். இந்நிலையில், அவர்களை மனிதாபிமான முறையில் விடுதலை செய்வதற்கு, சோனியா காந்தி, ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் இணங்கியுள்ளனர்.

"ஆனாலும், ராஜீவ் காந்தியின் இழப்பு, நாட்டுக்கு மட்டுமன்றி காங்கிரஸ் கட்சிக்கும் பேரிழப்பாகும். இருப்பினும், அவரைக் கொன்றவர்களை விடுதலை செய்யுமாறு தொடர்ந்து கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. இவை, சில அரசியல் கட்சி மற்றும் பொதுநலவாதிகளின் கோரிக்கையாக இருக்கலாம்.

"எனினும், காங்கிரஸின் தொண்டன் என்ற அடிப்படையில், தவறு செய்தவர்கள் நிச்சயம் தண்டனை அனுபவிக்க வேண்டும். ஆகவே, அவர்களை நாங்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜூனில் வருகிறது...

காலத்தில், ஒன்லைன் முறைப்படி மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளைச் சட்டரீதியாக உறுதி செய்துகொள்வது, இந்தச் சட்டமூலம் ஊடாக நிறைவேற்றப்படும் என்றும், அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளன என்றும் வெகு விரைவில் அது, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பத்திக் வெசாக்கூடு...

இதன் முதலாவது கூடு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவால் வழங்கப்பட்டது. வீடுகளில் இருந்தவாறு வெசாக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவோருக்கு, தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக வெசாக் அலங்கார நிர்மாணங்களைக் கண்டுகளிப்பதற்கு வாய்ப்பளிப்பது பத்திக் வெசாக் வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். அதனால், தேசிய மூலப்பொருள்கள் மற்றும் கலாசார மரபுகளை மேம்படுத்தி, பத்திக் வடிவமைப்புகளுக்கு ஒரு புதிய போக்கை உருவாக்குவதற்காக இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

## தாழமுக்கம் இன்று புயலாக மாறும்

அத்தோடு, இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்பதுடன், 70 தொடக்கம் 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமென்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, வங்காள விரிகுடாவின் கிழக்கு, மத்திய பகுதியிலும் அதனையடுத்து நாட்டைச் சூழவுள்ள கடல் பிரதேசத்திலும், நேற்று (23) முதல் மறு அறிவித்தல் வரை, மீன்பிடி மற்றும் கடல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில், நாளை முதல் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு, 150 மில்லி மீற்றருக்கும் அதிகளவில் மழை பெய்யக்கூடும் எனவும் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. இதனால், அனர்த்த நிலைமைகள் ஏற்படும்போது, அவற்றை எதிர்கொள்ளத் தயாராக இருக்குமாறு, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, உரிய தரப்பினரை அறிவுறுத்தியுள்ளார்.

## குளறுபடியை ஆராய இரு விசாரணைகள்

உறுப்பினர் சாகர காரியவசம் ஆகியோரால், விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாராளுமன்றத்தின் மின்னணு வாக்குப்பதிவு முறைமையில் ஏதேனும் கோளாறு இருக்கின்றதா என்பது பற்றி கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, தகவல் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த டீ சில்வாவுக்கு, பணிப்புரை விடுத்துள்ளார். இதேவேளை, இவ்விவகாரம் தொடர்பில் கண்டறிந்து, முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு, பாராளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகம் தம்மிக கித்துல்கலவுக்கும், சபாநாயகர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## ‘மீண்டும் அரசியலுக்கு வாருங்கள்’

# மங்களவுக்கு சாணக்கியன் கோரிக்கை

அரசியலில் இருந்து ஓய்வுப் பெறுவதாக அறிவித்துள்ள முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மீண்டும் அரசியலுக்கு வர வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை விட தற்போதையப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் தொடர்பு அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனாலேயே 2015ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவால், 2019 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்ததாகத் தெரிவிக்கும் அவர், மஹிந்த ராஜபக்ஷ இல்லை என்றால், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்கிற ஒரு கட்சி இருந்திருக்காதெனவும் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே சாணக்கியன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதோடு, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திறமையானத் தலைவரெனவும் ஆனால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் போல மக்கள் தொடர்பு அவருக்குக் குறைவெனவும், மக்களுடனானத் தொடர்பாடலை வளர்த்துக்கொண்டால் நாட்டின் மிகச்சிறந்தத் தலைவராக ரணிலால் இருக்க முடியுமென்றார்.

“எனக்குப் பிடித்தத் தலைவர் பிரதமர் மஹிந்த. பாராளுமன்றத்தில் உள்ள எந்தவொரு புதுமுக உறுப்பினர்களின் பிரச்சினைகளைக்கூட கேட்டறிந்துக்கொள்வார். சிரித்து சகஜமாகப் பழகக்கூடியவர். மஹிந்தவுக்கு மக்கள் தொடர்பு அதிகமாக இருக்கின்றது” என்றும் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு



பொதுவேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரி, தனக்கு வழங்கப்பட்டிருந்தப் பொறுப்புக்களை மறந்துச் செயற்பட்டாரெனவும், ஜனாதிபதியானதன் பின்னர் மைத்திரி தவறாக வழிநடத்தப்பட்டார் என்றும் மைத்திரிக்கு நொபேல் பரிசு வழங்க வேண்டுமென பலர் கடந்தக் காலங்களில் கூறியதாகவும் தெரிவித்தார்.

மைத்திரி 2015ஆம் ஆண்டு ஆரம்பித்தப் பயணத்தை அதே முறையில் தொடர்ந்திருந்தால், உலகில் தலைச்சிறந்தத் தலைவராக ந்திருக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிறந்த நிர்வாகியாக இருந்தாலும், அவருக்கு அரசியல் அறிவுக் குறைவெனத் தெரிவித்த சாணக்கியன் எம்.பி, 20ஆவது திருத்தம் நிறைவேற்றப் பட்டதன் பின்னர் நாட்டிலுள்ள முத்துறைகளைவிட தான் மேலானவரென ஜனாதிபதி நினைப்பதாகவும் தெரிவித்தார்.

அரசியலில் இருந்து ஓய்வுப்பெறுவதாக அறிவித்துள்ள முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, மீண்டும் அரசியலுக்கு வர வேண்டுமென தான் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## ‘அப்பெட்டி ஒருபோதும் வெறுமையாக இருக்காது’




இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த, போக்குவரத்துப் பொலிஸார் இருவர், ஒரு பெட்டியுடன் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் படம், சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

உயர் ரக மதுபானங்கள் எடுத்துச் செல்லும் வகையில் அப்பெட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. அதில், எவ்வகையான போத்தல்கள் அடுக்கப்பட்டிருக்கும் என்பதுத் தொடர்பிலும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

ஆனால், அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்பதுத் தொடர்பில் யாருக்கும் தெரியாது.

சமூக வலைத்தளங்களில் அந்தப் படம் வைரலாகியுள்ளது. “அப்பெட்டி ஒரு போதும் வெறுமையாக இருக்காது என நினைக்கின்றேன்” என பலரும் தங்களுடைய கருத்துகளை பகிர்ந்துள்ளனர்.

## தாக்குதலை வேடிக்கைப் பார்த்த

# பொலிஸாருக்கு விளக்கமறியல்

வெலிகம பிரதேசத்தில் வைத்து நபர் ஒருவர் மற்றொரு நபரைத் தாக்கும்போது அதனைக் கண்டுங்காணாததுபோல வேடிக்கைப் பார்த்த இரு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம பிரதேசத்தில் வைத்து பஸ் சாரதி ஒருவர் அங்கிருந்த மற்றொரு நபரை இரவில் கடுமையாகத் தாக்கியிருந்த நிலையில், சம்பவ இடத்திலிருந்த இரு பொலிஸார் அதனை வேடிக்கைப் பார்த்ததோடு, தாக்குதலை தடுக்கத் தவறியமைத் தொடர்பான சிசிடீவி காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.


இச்சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன, அச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தில் தாக்குதலை மேற்கொண்ட குறித்த பஸ் சாரதி கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றார்.

மேலும் இச்சம்பவம்



நடைபெற்றபோது, அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த இரு பொலிஸார் தாக்குதலை தடுக்க தவறியதோடு, இதுபோன்ற சம்பவங்கள் நடக்குமாக இருந்தால், அதனைத் தடுக்க வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது. தாக்குதலுக்குள்ளாகும் நபரைக் காப்பாற்ற வேண்டியதும், தாக்குதலில் ஈடுபடும் குற்றவாளியை கைது செய்வதும் பொலிஸாரின் பொறுப்பு என்றார்.

எனவே தாக்குதலைத் தடுக்கத் தவறியப் பொலிஸார் இருவரும் கைது செய்யப்பட்டு மாத்தறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர்களை இம்மாதம் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



## கொரோனா செய்தி துளிகள்

- பொத்துவிலில் உள்ள ஹோட்டலில் தங்கியிருந்த அமெரிக்கப் பிரஜை, தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியமைக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.
- நேற்று முன்தினம் (22) கொழும்பிலேயே அதிகளவானத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
- கொரோனா தொற்றாளர்களுக்கு 20 ஆயிரம் படுக்கைகளைக் கொண்ட 112இக்கும் அதிகமான சிகிச்சை நிலையங்களை நாடு முழுவதிலும் இராணுவம் குறுகியக் காலத்தில் நிர்மாணித்துள்ளது.
- பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்படும் நாளைய (25) தினம் அனைத்து மதுபான நிலையங்களையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய 369 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மொகா கடன் திட்டங்களுக்கு முற்றுப்புள்ளியா?

வெளிநாடுகளில் இருந்துப் பாரியளவிலானக் கடன்களைப் பெற்று, இனி நாட்டில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படமாட்டாதென ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு கடன் வலைக்குள் சிக்காது, புதிய மொடல் (மாதிரி) ஒன்றுக்கு மெதுவாகச் செல்ல வேண்டுமெனவும், நாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உள்ளூரிலேயே நிதித் திரட்டப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கிய ஆகியவற்றிடமிருந்து இலங்கை மேலும் பல உதவிகளை எதிர்பார்ப்பதாக



தெரிவித்த அவர், நாட்டில் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்து அவற்றைப் பயன்படுத்துவதே அரசாங்கத்தின் இலக்கு எனவும், இதற்கடையில் கடந்த வருடத்தைப்போல இந்த வருடமும் எந்தவொரு பாரிய அபிவிருத்தித் திட்டங்களும் நாட்டில் முன்னெடுக்கப்படாதெனவும் தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு என்பவற்றிலிருந்து மீள்வதற்கு விவசாயத்திலிருந்து உடனடியான மாற்றங்கள் வர வேண்டுமெனவும், விவசாயம், கால்நடை, மீன்பிடி ஆகியத் துறைகள் தொடர்பில் சிந்தித்து, உலகின் பல நாடுகளில் உணவுத் தேவைக் காணப்படுவதால் இவற்றை ஏற்றுமதி செய்ய வேண்டுமெனவும் தெரிவித்தார்.

சீனா அல்லது இந்தியாவிடமிருந்து நிதியுதவிகளைப் பெற்று முன்னெடுக்கப்படும் ரயில்வே அல்லது நெடுஞ்சாலைகள் திட்டங்களை நம்பிக்கொண்டிருக்காது, சிங்கப்பூர் செய்ததைப்போல ஓர் உலகளாவியக் கதையை இலங்கை உருவாக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.


## இணையக் கற்கையால் மன அழுத்தம்;

## ஆசிரியர்கள், மாணவர்கள் பாதிப்பு

சகா

தற்போது நடைமுறையிலுள்ள இணையவழி (ஒன்லைன்) கல்வி முறையின் மூலம் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை தொடர்வதில் மாணவர்கள், ஆசிரியர்கள் மன அழுத்தங்களுக்குள்ளாகிய பல்வேறு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாணவர்கள் இணையவழி (ஒன்லைன்) மூலமான கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பாடசாலை சீருடைகளை அணிய வேண்டும் என்று அழுத்தம்



கொடுப்பதாகவும், ஆசிரியைகள் சாரி அல்லது ஒசரி போன்ற உடைகளை அணிந்து பாடங்களை நடத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே, இதுபோன்றச் சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனவும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் தேவையற்ற மன அழுத்தங்களுக்கு உள்ளாகாதவாறு மிகவும் பொருத்தமான ஆடைகளை அணிந்து, உரிய நேரத்துக்கு கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட அறிவுறுத்துமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

# தேசியப் பாடசாலைத் திட்டம்; ‘வெறும் பெயர் மாற்றமா?’


அரசாங்கத்தின் தேசிய பாடசாலை திட்டம் என்பது பட்டியலில் சேர்ப்பதும் பெயர்மாற்றம் செய்வதுமா என்று, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

‘எமது அரசியல் பலம் மத்திய அரசாங்கத்தில் வலுவாக இருக்க வேண்டும். இல்லையென்றால் மாகாணத்தில் இருந்து கிடைத்தது கூட, மத்தியில் இருந்து கிடைக்காமல் போய்விடும்” எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதுத் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், “அரசாங்கத்தின் தேசிய பாடசாலை திட்டம் என்பது ஓராண்டுக்கு முன் முன்மொழியப்பட்டது. ஓராண்டு கடந்து, தேசிய பாடசாலைகளாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் பெயர்கள் வெயிடப்பட்டுள்ளன. அதன்படி, அப்பாடசாலைகளின் பெயர்கள் மாற்றப்பட உள்ளதாக தெரிய வருகின்றது. இதிலிருந்தே அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களின் நிலைமைகளை நன்கு புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது” எனவும் தெரிவித்துள்ளார்.

“தற்போது இருக்கின்ற பாடசாலைகளில் வளங்கள் நிறைந்த பாடசாலைகளை, அல்லது பெரிய பாடசாலைகளை தேசிய பாடசாலை என்று பெயரிட்டு விட்டால் அது சரியானதா? எனவும கேள்வி எழுப்பியுள்ளார்.

# கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம்



ஆர்.சுரேஸ்குமார்

பதுளை ஹப்புத்தளை கல்கந்த கிராம சேவை பிரிவுக்கு உட்பட்ட சில மலைப்பாங்கான இடங்களில் கற்பாறைகள் சரிந்து விழுந்துள்ளன.

அத்துடன் அப்பகுதியில் மண்மேடு சரிந்து விழும் அபாயம் காணப்படுவதாக, ஹப்புத்தளை பிரதேச செயலாளர் சுனில் அபேகோன் தெரிவித்துள்ளார்.

> **சில கற்பாறைகள் சரிந்து விழுந்துகிடந்தன. இதனால் எவருக்கும் எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இப்பகுதியில் 60 பேர் வரை வசித்து வருகின்றனர். மேலும், ஹப்புத்தளை – கொழும்பு பிரதான வீதியில் பயணிப்போர் அவதானத்துடன் செயற்படுமாறு**

பிரதேச மக்களால் வழங்கப்பட்டத் தகவலையடுத், நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக ஹப்புத்தளை பிரதேசசபையின் தவிசாளர் கந்தசாமி கண்ணா, ஹப்புத்தளை பிரதேச செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், அப்பகுதிக்கு நேற்று(23) விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது சில கற்பாறைகள் சரிந்து விழுந்துக்கிடந்தன என்றும் இதனால் எவருக்கும் எந்தவிதப் பாதிப்புகளும் ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் 60 பேர் வரை வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், ஹப்புத்தளை  கொழும்பு பிரதான வீதியில் பயணிப்போர் அவதானதத்துடன் செயற்படுமாறு ஹப்புத்தளை பிரதேச செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, அனர்த்தங்கள் தொடர்பில் அவதானத்துடன் இருப்பதாக பதுளை மாவட்டச் செயலாளர் தமயந்தி பரணகம தெரிவித்துள்ளார்.

## 5 மாகாணங்களில் இன்று மழை பெய்யலாம்

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் இன்று (24) காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுக்கூறியுள்ளது.

> **வடக்கு, வட மத்திய மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் எனவும் கிழக்கு, ஊவா மாகாணங்களில் மாலை, இரவில் இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது**

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும்என எதிர்பார்க்கப்படுவதாகவும், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் எதிர்வுக்கூறப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், குறிப்பாக மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரபாகரனின் பட விவகாரம்:

# சிறுவனுக்கு பிணை



■ ஜூட் சமந்த

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படத்தை, அலைபேசியில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 14 வயதான சிறுவனும் அவருடன் தங்கியிருந்த 21 வயதான மற்றுமோர் இளைஞனும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தலா ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில், இவர்களைப் பிணையில் விடுதலை செய்யுமாறு, புத்தளம் பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நுரைச்சோலை பொலிஸாரால் நேற்று முன்தினம் (21) கைதுசெய்யப்பட்ட இருவருமே இவ்வாறு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களுள் ஒருவரான சிறுவன், வாகரை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், இவர் கற்பிட்டி- நுரைச்சோலை பிரதேசத்திலுள்ள புகையிலை உற்பத்தி செய்யும் பண்ணைக்குத் தொழிலுக்காக வந்தாகவும், இதன்போது நுரைச்சோலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபரின் அலைபேசியை சோதனை செய்த போது, அதில் பிரபாகரனின் புகைப்படங்கள் இருந்துள்ளன.


இதனையடுத்து 14 வயது சிறுவனை கைதுசெய்த பொலிஸார், அவருடன் தங்கியிருந்த 21 வயதான மற்றுமோர் இளைஞரையும் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து, இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## பயணத் தடை அமுலில்...



கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக வெள்ளிக்கிழமை (21) இரவு 11 மணி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடை, அம்பாறை மாவட்டத்தில் இரண்டாவது நாளாக, நேற்றும் (23) தொடர்ந்தது.
அக்கரைப்பற்று, கல்முனை, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் எவ்வித போக்குவரத்துகளும் இடம்பெறவில்லை. கடைகள் மூடப்பட்டு, மக்கள் நடமாட்டமின்றி, நகரங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன.
(படங்கள் – எம்.எஸ்.எம். ஹனீபா)

## மழைக் காலம்; மற்றுமொரு சவால்



■ நூருல் ஹுதா உமர்

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்திருக்கும் இந்தச் சூழ்நிலையில் மற்றுமொரு சவாலாக டெங்கும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்து இருப்பதால் டெங்கு பரவும் அபாயம் அதிகமாக உள்ளதாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எம்.அல் அமீன் றிசாட் தெரிவித்தார்.

வீடுகள், அலுவலகங்கள் அடங்கலாக நீர்தேங்கி, நுளம்புகள் பரவும் இடங்களை உடனடியாகச் சுத்தம் செய்து, தங்களையும் தங்களது அயலவர்களையும் பாதுகாத்துக் கொள்ளுமாறும் பொதுமக்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்குக் காய்ச்சலால் சிறுவனொருவன் பாதிக்கப்பட்டதையடுத்து, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க, பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.எம். பைசாலின் தலைமையில், நுளம்பு ஒழிப்பு கள உதவியாளர்கள் மூலம் சாய்ந்தமருதில் பல இடங்களில் தீவிரமான முறையில் புகைவிசிறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பயணக் கட்டுப்பாட்டில் மதுபான விற்பனை

### ஒருவர் கைது



■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முனைக்காடுப் பிரதேசத்தில் பயணக் கட்டுப்பாட்டுக் காலப்பகுதியில், சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரையின் கீழ், மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே, இந்நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் வீட்டில் வைத்து மதுபான வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டு உள்ளதுடன், 48 டின்கள், 9 போத்தல் பியர் ஆகியனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சட்டவிரோத வியாபாரம் தொடர்பில் இரகசியத் தகவல் கிடைத்திருந்ததாக பொறுப்பதிகாரி பி எஸ்.பி பண்டார தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடு;

## மீறுவோர் மீது கடும் நடவடிக்கை

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

நாடு முழுவதிலும் அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாட்டை, மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரும் பொலிஸாரும் கடுமையாக அமுல்படுத்தி வருகின்றனர். மட்டக்களப்பு நகரம் உட்பட பல முக்கிய இடங்களில் படையினரும் பொலிஸாரும் அதிகளவில் நிறுத்தப்பட்டு, பயணக்கட்டுப்பாட்டை மீறி வீதிகளில் நடமாடுவோரைக் கண்டுபிடிக்க சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். மாவட்டத்தின் பெரும்பாலான நகரங்கள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

கொரோனா சடலங்களுக்கான

## ‘மாற்று இடங்களை அடையாளப்படுத்தவும்’

■ ஒலுமுதீன் கியாஸ், ஹஸ்பர் ஏ ஹலீம், எம்.எஸ்.எம். ஹனீபா

கொரோனாவால் மரணமடைவோரை, ஓட்டமாவடியில் மட்டுமே தற்போது அடக்கம் செய்து வருகின்றனர். இதனைத் தவிர, சடலங்களை அடக்கம் செய்வதற்கு மாற்று இடங்களும் அடையாளப்படுத்தப்பட வேண்டுமென திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது,

“நாட்டில் சகல பாகங்களிலும் கொரோனாவால் மரணமடைவோரின் உடல்கள் இன, மத பேதமின்றி ஓட்டமாவடியில் மட்டுமே நல்லடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது மரணமடைவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனால் மிகக் குறுகிய காலத்தில் 200க்கும் மேற்பட்டோரின் உடல்கள் இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

“வைத்தியர்களின் அறிக்கைப்படி அடுத்து வரும் வாரங்களில் மரணமடைவோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம். அப்படி அதிகரிக்கும் போது, ஓட்டமாவடியில் அடக்கத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணி போதாமல் போகலாம்.

“எனவே, தற்போதே மாற்று இடங்களை அடையாளம் கண்டு கொள்வது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதால், இது குறித்து அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். இறக்காமம், புத்தளம், மன்னார், கிண்ணியா போன்ற பிரதேசங்களில் மாற்று இடங்கள் ஏற்கெனவே அடையாளப்படுத்தப்பட்டு உள்ளன. இவற்றில் பொருத்தமானவற்றை உறுதிப்படுத்த வேண்டும்” என்றார்.

முல்லைத்தீவு ஊடகவியலாளர்களுக்கு

# கடும் கெடுபிடி

■ சண்முகம் தவசீலன்




கொரோனா தொற்று பரவல் அதிகரித்து வருவதை அடுத்து, நாட்டில் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், அத்தியாவசிய சேவைகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு பயண அனுமதி வழங்கப்பட்டபோதும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊடகவியலாளர்கள் மீதான இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக, முல்லைத்தீவு நகர் பகுதிக்கு, செய்தி அறிக்கையிட செல்லும் ஊடகவியலாளர்கள் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மூன்றாம் கட்டை பகுதியில் உள்ள படையினரின் வீதிச் சோதனை சாவடியில் தடுத்து நிறுத்தப்படுகின்றனர். குறிப்பாக, பொலிஸார் அனுமதி வழங்கினாலும், குறித்த பகுதியில் உள்ள இராணுவத்தினர் ஊடகவியலாளர்களைத் தடுத்து நிறுத்தி, திருப்பி அனுப்பி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு, வெள்ளிக்கிழமை (21), செய்தி அறிக்கையிடலுக்குச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர், மூன்றாம் கட்டைப் பகுதியில் உள்ள படையினரின் வீதிச் சோதனை நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்.

தான் ஊடகவியலாளர் என்றும் மாவட்டச் செயலகத்தின் அறிவித்தலுக்கு அமைய செய்தி சேகரிக்கச் செல்வதாகவும், படையினருக்குத் தெரிவித்த போதும், படையினர் அனுமதி வழங்க மறுத்துள்ளனர்.

குறித்த வீதி ஊடாக, அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் பலர் தங்களை அடையாளப்படுத்தி சென்று வருகின்ற நிலையில், ஊடகவியலாளருக்குத் தடை விதிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் முல்லைத்தீவுக்குச் சென்ற மற்றுமோர் ஊடகவியலாளரையும் இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

ஊடகங்களுக்கு அனுமதி உள்ளதாகத் தெரிவித்த போதும், அவருக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதன்பின்னர், அப்பகுதியில் கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரியை அழைத்து குறித்த ஊடகவியலாளர் கலந்துரையாடி, ஊடகவியலாளருக்கு செல்ல அனுமதி உள்ளது என தெரிவித்ததை அடுத்து, பொலிஸ் அதிகாரி அவருக்கு அனுமதி வழங்கியுள்ளார். இருந்தபோதும், இராணுவத்தினர் அவரை அனுமதிக்கவில்லை.

இதனை தொடர்ந்து, சுமார் 15 நிமிடங்களின் பின்னர், உரிய தரப்புகளின் உத்தரவுக்கமைய, ஊடகவியலாளரின் விவரங்களைப் பதிவுசெய்து கொண்டு அவரைச் செல்ல அனுமதித்தனர்.

உயிரிழந்த

## சிறுமிக்கு கொரோனா

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நாகேந்திரபுரம் பகுதியில், தனது உயிரை மாய்த்துக் கொண்ட 15 வயதுச் சிறுமிக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் சிறுமி, நஞ்சு அருந்திய நிலையில், உறவினர்களால் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் சடலத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போது, அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தச் சிறுமி வசிக்கும் பிரதேசத்தில், முல்லைத்தீவு ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பலருக்கு கொரோனா தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்நாசி குளப்பகுதியில்

## பெண்ணின் சடலம் மீட்பு

■ மு.தமிழ்ச்செல்வன்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பளை -தம்பகாமம், இன்நாசி குளப்பகுதியில் இருந்து, நேற்று (23) காலை, பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தம்பகாமம் பகுதியைச் சேர்ந்த பொன்னையா வனஜா (வயது 47) என்பவரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என, பளை பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பெண், நேற்று முன்தினம் (22) காணாமல் போயிருந்த நிலையில், நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிரேத பரிசோதனை மற்றும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுமென்றும், பொலிஸார் கூறினர்.





கிளிநொச்சி மாவட்டத்தில்

## ‘தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு’

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்டத்தில், நாளுக்கு நாள் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக, கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில், நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தமாக 452 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு உள்ளனரெனவும் அவர்களில் 400 பேர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களென்றும் 52 பேர் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களென்றும் கூறினார்.

சனிக்கிழமை (22) 36 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனரெனத் தெரிவித்த அவர், இந்நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தில் நாளுக்கு நாள் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனரென்றும் எனவே, மக்கள் விழிப்புணர்வுடனும் அவதானத்துடனும் நடந்துகொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

அத்துடன், இதுவரை, சுகாதாரத் திணைக்களத்தால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 1,372 குடும்பங்களுக்கு நிவாரணப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், மாவட்டச் செயலாளர் கூறினார்.

குடிநீர் பிரச்சினையாயின்

## ‘உடன் தொடர்புகொள்ளவும்’

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்கள் முடக்கப்படுகின்ற போது அல்லது அப்பகுதியில் உள்ள குடும்பங்கள் தனிமைப்படு த்தப்படுகின்ற போதோ குடிநீர் பிரச்சினை ஏற்படுமாயின், அதைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக, கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், நாட்டில் தற்போது பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதாக இருந்தால், வட்டார உறுப்பினர்கள் அல்லது உப பிரதேச சபை பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொ ள்ளுமாறும், அவ்வாறு தொடர்புகொள்ளும் போது குடிநீரை, இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளதாகவும் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மூன்று பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் கரைதுறைப்பற்று பிரதேசம் காணப்படுகிறது. இந்தப் பிரதேசத்தில் 13 ஆயிரத்து 280 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

அத்துடன், ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய கொரோனா தொற்றாளர்கள் என 88 குடும்பங்கள் (21.05.21 வரை) தனிமைப்படுத்தப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.






விபத்தில் தொழிலாளர்கள் பாதிப்பு;

# நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல்

■ ஆ.ரமேஸ்

இராகலை செண்லெனாட்ஸ் நடுக்கணக்குப் பகுதியில், கடந்த வெள்ளிக்கிழமை (21) இடம்பெற்ற விபத்துத் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, கம்னியூஸ்ட் தொழிலாளர் சங்கம், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி என்பன தெரிவித்துள்ளன.

மத்துரட்ட பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இராகலை குரூப் தோட்ட நிர்வாகத்துக்கு எதிராகவே, தொழிலாளர்கள் உரிமை மீறல் சட்டத்தின் கீழ் இந்த வழக்குத் தொடரப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கம்னியூஸ்ட் தொழிலாளர் சங்கம், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆகியவை இணைந்து முன்னெடுத்து வருகின்றன.

இராகலை உடப்புஸ்ஸலாவை பிரதான வீதி, நடுக்கணக்கு யானை வளைவுப் பகுதியில், டிரக்டர் வண்டியொன்று உடைந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த ஓர் ஆண் தொழிலாளி உட்பட 25 பெண் தொழிலாளர்கள், படுகாயமடைந்த நிலையில், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் கை விரலொன்றை இழந்துள்ளதுடன் மற்றுமொரு தொழிலாளிக்கு கண்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி இருவரும் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருவதுடன் ஏனைய தொழிலாளர்கள் அனைவரும் அன்றைய தினமே வீடுகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

முறையான சிகிச்சை வழங்கப்படாமலேயே அவர்கள் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

மேற்படி தொழிலாளர்கள், மறுதினம் காலை மீண்டும் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்றபோது, சிகிச்சை வழங்காமல் வைத்தியசாலை நிர்வாகம் அவர்களை மீண்டும் வீடுகளுக்கே அனுப்பியுள்ளது.

இந்நிலையில் விபத்துக்குள்ளான தொழிலாளர்கள் நாள் கணக்கில் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவார்களாயின் அந்த நாள் கணக்குக்கான நட்டஈட்டை செலுத்த வேண்டி வரும் என்பதால், தோட்ட நிர்வாகத்தின் சூழ்ச்சியால் தொழிலாளர்கள் வைத்தியசாலையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டிருக்கலாம் என்று, மேற்படி தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

பிரதான வீதியில் விபத்து இடம்பெற்றுள்ளதால், முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளதாக மேற்படி சங்கத்தின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விபத்தில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு, தோட்ட நிர்வாகம் நட்டஈடு வழங்க முன்வர வேண்டும் என்றும் இதற்காக தொழிலாளர்கள் உரிமைச் சட்டத்தின் கீழ், சிவில் வழக்குத் தொடர்வதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளதாகவும் மேற்படி சங்கத்தின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

## ‘விபத்துக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவும்’

■ ஆ.ரமேஸ்



இராகலை நடுக்கணக்குப் பகுதியில், கடந்த (21) வெள்ளிக்கிழமை இடம்பெற்ற உழவு இயந்திர விபத்துக்கான முழு பொறுப்பையும் தோட்ட நிர்வாகமும் கம்பனியுமே ஏற்க வேண்டும் என்று, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், “கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே மத்துரட்ட கம்பனிக்கும் தோட்ட முகாமையாளருக்கும் தொழிலாளர்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிச்செல்ல வேண்டாம் என்று கடிதம்மூலம் அறிவித்திருந்தோம். அதையும் மீறி தொழிலாளர்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிச்சென்றுள்ளனர்.

“தொழிலாளர்கள் மாடுகளோ, விறகுக் கட்டைகளோ அல்ல. இந்நாட்டின் முதுகெழும்பு. அவர்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் செல்வது எவ்வகையிலும் நியாயமாகாது. விபத்துக்கு உள்ளானவர்களுக்கான முழுப் பொறுப்பையும் மத்துரட்ட கம்பனியும் தோட்ட நிர்வாகமுமே ஏற்க வேண்டும். அவ்வாறு ஏற்காவிடின் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பேன்” என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர்

# சேவையிலிருந்து ஓய்வு

■ மெய்யன்




மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் ஈ.பி. டீ.கே ஏக்கநாயக்க, கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

இவரை பன்விலை பிரதேச கல்விச் சமூகத்தினர் வெகுவாகப் பாராட்டி வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.

இவர் பன்முக ஆளுமை, சிறந்த நிர்வாகம், தேசிய உற்பத்தித் திறன், பாடசாலை மாணவர் நல்லிணக்கம், கணினி கல்வி விருத்தி, விளையாட்டுத்துறை, அதிபர், ஆசிரிய வாண்மை விருத்திச் செயற்றிட்டம், முதலான கல்விப்புலம் சார்ந்த செயற்பாடுகளை வகைக்கூறலுடன் செயற்படுத்தியுள்ளார்.

எல்லாவிதமான சவால்களையும் சாதுர்யமாகக் கையாண்டு மத்திய மாகாணக் கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாணிக்கக்கல் அகழ்ந்த இருவர் கைது



■ ரஞ்சித் ராஜபக்ஷ

பொகவந்தலாவை மோரா தோட்டத்தில், சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட குறித்த தோட்டத்தைச் சேர்ந்த இருவரை, பொகவந்தலாவை பொலிஸார் நேற்று (22) முன்தினம் மாலை கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குறித்த இருவரையும் கைதுசெய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# உலருணவுப் பொருட்கள் கையளிப்பு

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா மாநகர விளையாட்டு உள்ளரங்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தும் மத்திய நிலையத்துக்கு, ஒன்றிணைக்கப்பட்ட நுவரெலியா வர்த்தக சங்கத்தால், ஒரு தொகை உணவுப் பொருட்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பன கையளிக்கப்பட்டன. நுவரெலியா நகர வர்த்தக சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவருமான டக்ளஸ் நாணயக்கார தலைமையிலான குழுவினர், இதனை நுவரெலியா மாவட்டச் செயலாளர் நந்தன கலப்பட, நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளர் பெத்தும் அநுராத சரத்சந்திர ஆகியோரிடம் கையளித்தனர். இதேபோன்று மேலும் ஒரு தொகை உணவுப் பொருட்களும் சுகாதார மற்றும் விளையாட்டு உபகரணங்களும் நுவரெலியா மாவட்ட சுகாதார பணிப்பாளர் காரியாலயத்துக்கு வழங்கப்பட்டன.

லயன் குடியிருப்பில் தீ;

# மூன்று வீடுகள் சேதம்




■ ஆ.ரமேஸ், டி.கேதீஸ், எஸ்.கணேசன்

நானுஓயா சமர்செட் தோட்டப் பிரிவில், 10 வீடுகளைக் கொண்ட லயன் குடியிருப்பில், நேற்று (23) காலை 10 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில், மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், ஐந்து வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று, நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டாம் இலக்க லயன் குடியிருப்புப் பகுதியிலேயே தீ ஏற்பட்டுள்ளது. நானுஓயா பொலிஸாரும் தோட்ட மக்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இதனால், சுமார் 47 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இவர்களில் 23 பேர் தோட்ட பிள்ளைப் பராமரிப்பு நிலையத்திலும் ஏனையவர்கள் உறவினர்களின் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை நுவரெலியா மாவட்டச் செயலகத்தினூடாகவும் தோட்ட நிர்வாகத்தினூடாகவும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பில், நானுஓயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# டயகம வைத்தியசாலையை திறக்க நடவடிக்கை

“வைத்தியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து மூடப்பட்ட டயகம வைத்தியசாலையில், ஒவ்வொரு பிரிவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என, லிந்துலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி ஜனத் அபேகுணரத்ன தெரிவித்தார்.

முதற்கட்டமாக பற்சிகிச்சைப் பிரிவைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வைத்தியருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவருடன் தொடர்பைப் பேணிய வைத்தியசாலையின் ஊழியர்கள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் தனிமைப்படுத்தப்பட்டனர்.

எனினும், ஊழியர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்படாததால் வைத்தியசாலை நடவடிக்கைகளைக் கட்டம் கட்டமாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்துக்கு

# அனர்த்த எச்சரிக்கை

■ அஜித்லால்ளாந்த உதய




இரத்தினபுரி மாவட்டத்தில், சீரற்ற வானிலை இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளதால், மாவட்டத்தின் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு, மண்சரிவு அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளதாக, மாவட்டச் செயலாளர் மாலனி லொக்குபோத்தாகம தெரிவித்தார்.

26 ஆம் திகதி வரை மழை வானிலை நீடிக்கும் என்பதால், கொவிட் - 19 பரவலுடன் அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வெள்ளம், மண்சரிவு, கடும்காற்று உள்ளிட்ட அனைத்து அனர்த்த நிலைமைகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும் பாதுகாப்பான இடங்களில் அவர்களைத் தங்க வைப்பதற்குமான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் இடைத்தங்கல் முகாம்கள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் அனர்த்த நிலைமைகளை எதிர்கொண்டால் அவர்களைத் தங்க வைப்பதற்கான இடைத்தங்கல் முகாம்கள் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி, குருவிட்ட, எஹலியகொட, கிரிஎல்ல, அயகம, கலவான, நிவித்திகல, எலபாத்த, பெல்மடுல்ல, கஹவத்த, ஓப்பநாயக்க, பலாங்கொட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கே மண்சரிவு அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் களுகங்கையின் கிளை ஆறுகளான தெனவக்க, நிரிஎல்ல, குரு, கலத்துரு, குக்குலே ஆகிய கங்கைகளின் நீர்மட்டங்களை www.rivernet.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என்றும் எனவே கரையோரங்களில் வாழும் மக்கள் நீர்நிலைகள் பெருக்கெடுப்பது தொடர்பிலும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தினார்.

இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்படுபவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தேயிலை மலையிலிருந்து

# பெண்ணின் சடலம் மீட்பு

■ நவி

கம்பளை, புபுரஸ்ஸ முல்கம பகுதியிலுள்ள தேயிலை மலையிலிருந்து, 45 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலத்தை, நேற்றுக்காலை மீட்டுள்ள பொலிஸார், பிரேத பரிசோதனைக்காக கம்பளை வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இனங்காணப்படாத அந்த சடலம் தொடர்பில், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

# வெண்டலேட்டர் இயந்திரம் அன்பளிப்பு



கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கருத்திற்கொண்டு, பலாங்கொடை பிரதேச வியாபாரி ஒருவர், சுமார் 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான வென்டலேட்டர் இயந்திரத்தை, பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்குப் பெற்றுக்கொடுத்துள்ளார். மேற்படி இயந்திரம் வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# தமிழைத் தட்டிவிட்டு நுழையத் துடிக்கும் ‘குடியேற்ற மொழி’

இலங்கையில் வாழும் சிறுபான்மை இனத்தவர்கள், ஏதாவதொரு நெருக்குவாரத்துக்கு நாளாந்தம் முகங்கொடுத்துக்கொண்டே இருக்குமளவுக்கு, ஒவ்வொரு புறங்களாகச் சீண்டிப்பார்க்கும் செயற்பாடுகள், அப்பட்டமாகவும் மறைமுகமாகவும் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசியலமைப்பில் வழங்கப்பட்டிருக்கும் மொழியுரிமை அப்பட்டமாக மீறப்பட்டு, சீனமொழிக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்படுவது அதனோர் அங்கமாகும். எனினும், கடுமையான அழுத்தங்கள் காரணமாக, பதிக்கப்பட்டிருந்த சர்ச்சைக்குரிய நினைவுப்பலகை அகற்றப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களக் கட்டடத்தில், சீன அரசாங்கத்தின் நிதி உதவியில் இலத்திரனியல் நூலகம் நிறுவப்பட்டது. நினைவுப்பலகையில், இலங்கையின் அரச கரும மொழிகளில் ஒன்றான தமிழ்மொழி முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டு, சீன மொழிக்கு மூன்றாமிடம் கொடுக்கப்பட்டிருந்தது.

பிறமொழிகளைக் கற்றுக்கொள்வதிலோ, தெரிந்து வைத்திருப்பதிலோ எவ்விதமான தவறுகளும் இல்லை, ஆனால், அரச கருமமொழியொன்றை வேண்டுமென்றே இல்லாமல் செய்துவிட்டு, பலவந்தமாகப் புகுத்தப்படும் எந்தவொரு குடியேற்ற மொழி(யை)(களை)யும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

சட்டமா அதிபர் திணைக்களக் கட்டடத்தில் சீனமொழிக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பதியப்பட்ட நினைவுப்பலகை ஒரு தற்செயலான நிகழ்வாகப் பார்க்கமுடியாது. “திரைச்சீலையை விலக்கியதன் பின்னர்தான், அதிலிருந்தவை தெரிந்தன” எனும் வியாக்கியானம், முழு பூசணிக்காயையும் ஒரு பீங்கான் சோற்றுக்குள் மறைக்கும் செயலாகும்.

ஏனெனில், கொழும்புத் துறைமுக நகர வரவேற்புக் கல்லிலும் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு, இன்னும் திருத்தப்படவில்லை, முக்கிய ரயில் நிலையங்களில், சீனமொழிக்கு வழங்கப்பட்டிருக்கும் முன்னுரிமை, ஏனைய மொழிகளைப் பின்தள்ளிவிட்டே நிற்கிறது.

ஒவ்வோர் இனக் குழுவினதும் அடையாளம், அதன் தாய்மொழியாகும். அதுவே அதன் தனித்துவம்; சிறப்பு. இதன் அவசியத்தை உணர்த்தும் வகையிலேயே உலக தாய்மொழி தினம், பெப்ரவரி 21ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. தற்போதைய நிலைமை நீடித்தால், தமிழைத் தாய்மொழியாகப் பேசுகின்ற, இலங்கையில் வாழ்வோர், தாய்மொழி தினத்தைக் கொண்டாடவே முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

உலகநாடுகள் பலவற்றின் நிதியுதவியின் கீழ், பல்வேறான செயற்றிட்டங்கள் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்றன. அதனை நினைவுகூரும் வகையில், நினைவுக் கல்லில் அல்லது பலகையின் அடியில், ‘இந்த நாட்டினால் அன்பளிப்பு செய்யப்பட்டது’ என நிதி உதவியளித்த நாட்டின் பெயருடன் குறிப்பிடப்பட்டிருக்கும்.

ஆனால், சீனாவின் நிதி உதவியளிப்பின் ஊடாக முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களுக்கு மட்டும், சீன மொழிக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இதுவே, இலங்கையின் அரச கருமமொழிகளின் வரிசையில் முதலாவது இடத்திலிருக்கும் சிங்கள மொழியை அப்புறப்படுத்தி இருந்தால், இலங்கையர், நாட்டுப் பற்றாளர்கள், வானத்தைப் பிளக்குமளவுக்குக் குதித்துக் கூப்பாடு போட்டியிருப்பர்.

தமிழைத் தட்டிவிட்டு, ‘குடியேற்ற மொழி’யைப் புகுத்தும் செயற்பாடு கண்டிக்கத்தக்கது. அதனைத் தடுத்து நிறுத்திய சகலரையும் வாழ்த்துவதுடன், ‘வந்தபின்னர் கூப்பாடு போடாது, வருமுன்னர் காப்பதே சிறந்தது’ என வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சிலர் பேசும்போது, கேட்பவர்கள் குளம்பிப் போய்விடுவார்கள். மற்றவர்களைக் குழப்புவதற்கு என்றே சிலர் பேசுவார்கள். அந்தப் பேச்சில் உண்மை இருக்காது. மனம் நோகப் பேசுவது, பொய் உரைப்பது போன்றவற்றை எவருமே இரசிக்க மாட்டார்கள்.

பேசும்போது பொதுமைப் பண்பு வேண்டும். தன்னை மட்டும் உயர்த்திப் பேசுதல் அநாகரிகம். பிறர் திறமைகளை, நற்காரியங்களை, கல்வி ஞானத்தைப் போற்றி உரைப்பது நல்லோர்களின் குணம்.

இன்று அரசியலில் கடும் வார்த்தைகளில் திட்டிப் பேசுபவர்களை, கர்ஜித்துப் பேசுபவர்களை இரசிக்கும் கூட்டம் அலைமோதுகின்றது. பொறுமையாக நடப்பவர்கள் தூக்கி எறியப்படுவதும் உண்டு. சத்தம்போட்டு உரைப்பவர், சுவாரஸ்ய புருஷராகி விடுகின்றார்.

பொய்களை உண்மைபோல் புனைவதும் உரைப்பதும் அரசியல் நாகரிகம் அல்ல! இதைக் கூட இரசிக்கும் கூட்டம், தங்களைத் தாங்களே முட்டாள்கள் ஆக்கிக் கொள்கின்றது.

காலத்துக்குக் காலம் உலக அரசியல் மாறுகின்றது. ஆனால், முழுமையான பரிசுத்தவான்களைத் தேடுவது சிரமமாகவே உள்ளது. மக்களின் மனோநிலையில் தூய்மை ஜொலிக்க வேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# வஞ்சிக்கப்படும் தமிழ்மொழி



என்.கே. அஷோக்பரன்

கொழும்புத் துறைமுக நகரில், காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு பெயர்ப்பலகையின் படம், கடந்த நாள்களில் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

அந்தப் பெயர்ப்பலகையில் சிங்களம், ஆங்கிலம், சீனம் ஆகிய மொழிகளில் மட்டும் எழுதப்பட்டிருந்தது. தமிழ் வழமை போல, வஞ்சிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், சமூக ஊடகங்களில் ஏற்பட்ட கண்டனங்களைத் தொடர்ந்து, ‘சப்பைக்கட்டு’ அறிக்கையொன்றை, கொழும்புத் துறைமுக நகரை அபிவிருத்தி செய்யும் சீன நிறுவனம் வெளியிட்டிருந்தது.

இது நடந்த சில நாள்களின் பின்னர், சட்டமா அதிபர் திணைக்களத்தில் இலத்திரனியில் நூலகம் ஒன்று, சீனாவின் உதவியுடன் உருவாக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் ஒளிப்படங்கள், சமூக ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

சீனத் தூதுவரும் இலங்கையின் சட்டமா அதிபரும் நினைவுப் பலகையைத் திறந்து வைக்கும் ஒளிப்படத்தில், அந்த நினைவுப் பலகையின் வாசகங்கள் சிங்களம், ஆங்கிலம், சீனம் ஆகிய மொழிகளில் மட்டும் காணப்பட்டன. இலங்கையின் சட்டமா அதிபரின் திணைக்களத்தில் இது நடந்தமை, இதற்கெதிரான கண்டனங்கள் வலுவாக எழுப்பப்படக் காரணமாகியது.

சமூக ஊடகங்களில் எழுந்த வலுவான கண்டனங்களைத் தொடர்ந்து, குறித்த நினைவுப்பலகை தமிழ் உள்ளடங்கலாக, மாற்றி அமைக்கப்பட்டதாக சட்டமா அதிபரின் இணைப்புச் செயலாளர், ஊடகங்களுக்கு அறிவித்திருந்தார். சட்டமா அதிபர் திணைக்களத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம், நிறையக் கேள்விகளை எழுப்பி நிற்கிறது.

இலங்கையின் அரசியலமைப்பின்படி, இலங்கையின் இரண்டு உத்தியோகபூர்வ மொழிகளில் ஒன்று தமிழ். அத்தோடு இலங்கையின் இரண்டு தேசிய மொழிகளில் ஒன்று தமிழ். இவ்வாறான நிலையில், தமிழ் மொழி எவ்வாறு, ஓர் அரச நிறுவனத்தால், எதுவித சலனமுமின்றி தவிர்க்கப்பட்டு விடுகிறது என்பது, பெருங்கேள்வியை எழுப்புகிறது.

நிச்சயமாக, இந்த நினைவுப் பலகையை, அந்தத் திணைக்களத்தின் ஒன்று அல்லது, அதற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் வரைந்திருப்பார்கள். அதை, வேறு உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்திருக்கக்கூடும். அதற்கு அதிகாரிகள், அனுமதியை வழங்கி இருக்கக்கூடும். இவர்களில் எவருக்கும், இதில் தமிழ் மொழி இல்லாமை தெரியவில்லையா?

ஒருவேளை, இந்த நினைவுப் பலகையின் வரைபை, முதலில் தயாரித்திருந்தவர், சிங்கள மொழியைத் தவிர்த்துத் தயாரித்திருந்தால், அதனை மேற்பார்வை செய்த உத்தியோகத்தர்கள், அதை அனுமதித்து இருப்பார்களா? அப்படியானால், இலங்கையின் அரசியலமைப்பின் படி, இலங்கையின் உத்தியோகபூர்வ மொழி, இலங்கையின் தேசிய மொழி என்ற அந்தஸ்துகளைப் பெற்றுக்கொண்டுள்ள தமிழ் மொழி மட்டும், ஏன் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகிறது, ஏன் இவ்வாறு வஞ்சிக்கப்படுகிறது?

இது, இந்த நாட்டின் ஒவ்வொரு தமிழ்க் குடிமகனின் மனதிலும் கொந்தளிக்கும் கேள்வியாகும். அதுவும், நாட்டின் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் முன்னணியிலுள்ள ஓர் அரச திணைக்களம், அரசியலமைப்பின் உயிர்ப்புக்கு மாறாக நடந்துகொள்கிறது என்பது, அதிர்ச்சி தருவதாக அமைகிறது.

“நாம் அனைவரும் ஒருதாய் மக்கள்; ஒன்றாக வாழ வேண்டும்” என்று சொல்லத் தெரிந்தவர்களுக்கு, தமிழ் மொழி பேசுகிறவர்களை, குறைந்தபட்சம் மாற்றாந்தாய் மக்களாக, நடத்தாமல் ஏன் இருக்க முடியாமல் இருக்கிறது? அப்படியானால், இவர்கள் சொல்லும் ‘ஒரு தாய் மக்கள்’ என்பது, வெற்று வார்த்தையாகி விடுகிறதே? இப்படி ஆயிரம் கேள்விகள், இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழ்க் குடிமகன் மனதிலும் எழுவது, தவிர்க்க முடியாததாகும்.

தமிழ் மொழியைப் புறக்கணித்தமைதான், இலங்கை இனப்பிரச்சினை கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியதன் முதல் வரலாற்றுப் புள்ளி எனலாம். 1956ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க உத்தியோகபூர்வ மொழிச் சட்டம், சுருக்கமாக ‘தனிச் சிங்களச் சட்டம்’, இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் ஒரு கரும்புள்ளியாகும்.

சிங்கள மொழியை மட்டும், இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியாக மாற்றிய இந்தத் ‘தனிச்சிங்களச் சட்டம்’ இலங்கை அரசியல் வரலாற்றைப் புரட்டிப் போட்டதொரு நிகழ்வாகும். “எனது தந்தையாரினுடைய ‘தனிச் சிங்களச் சட்டமே’, இந்த நாட்டின் இனப்பிரச்சினையின் மூல காரணங்களில் ஒன்று” என, 2011ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் திகதி, நீதியரசர் பாலகிட்ணர் நினைவுப் பேருரையில், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மகளுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குறிப்பிடு இருந்ததை, நாம் இங்கு கவனத்திற்கொள்ள வேண்டும்.

அங்கு, அவர் மேலும் தெரிவிக்கையில், “தனிச் சிங்களச் சட்டம், 450 வருடங்களாகப் பாழ்பட்டிருந்த இலங்கைச் சுதேசியத்தைத் தட்டியெழுப்பியது. ஆனால், அது ‘மற்றவர்’களான தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர், மலேயர் ஆகியோரை அரவணைத்துச் செல்லத் தவறிவிட்டது, இதனால் அவர்களால் சம உரிமையுடன், கௌரவத்துடன், ஒரு தேசமாக வாழும் நிலை இல்லாது போய்விட்டது எனக் கூறியிருந்தார்.

‘தனிச்சிங்களச் சட்டம்’ கொண்டு வரப்பட்டு, ஏறத்தாழ 65 வருடங்களாகி விட்டன. இந்த 65 வருடங்களில் பல இனக்கலவரங்கள், இனவழிப்புகள், 30 வருட கொடும் யுத்தம் என, இரத்த ஆறு இந்தத் தீவில் ஓடியது. இத்தனை நடந்தும் இன்னும் தமிழ் மொழியை வஞ்சிப்பது மட்டும் மாறவேயில்லை என்பது, தமிழ் மக்களின் நெஞ்சில், ஆறாத புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போன்றதாகவே இருக்கிறது.

ஒரு நாட்டில், இரு மொழிக் கொள்கையையோ மும்மொழிக் கொள்கையையோ நடைமுறைப்படுத்துவது, ஒன்றும் இயலாத பெருங்காரியமல்ல. உலகின் பல்வேறு நாடுகள், வெற்றிகரமாக இதைச் சாதித்துக் காட்டி வருகின்றன.

ஆகவே, இரண்டு மொழிகளால் ஒரு நாட்டை நிர்வகிப்பதை இயலாத, கடினமான காரியமாகச் சொல்வதெல்லாம் வெற்றுப்பொய். அதைச் செய்வதற்கான மனோதிடம் இருந்தால், அது மிக இலகுவாகச் செய்துவிடக் கூடியதொன்றுதான்.

வட்டிக்குக் கடன் தரும் முதலாளியான சீனாவை மகிழ்விக்க, சீனாவுக்குப் ‘பந்தம்’ பிடிக்க, சீனமொழியை பெயர்ப்பலகைகளில், நினைவுப் பலகைகளில், பதாகைகளில் உள்ளடக்க முடியுமென்றால், இந்த நாட்டின் குடிமக்களின் தாய்மொழி, இந்த நாட்டின் தேசிய மொழி, இந்த நாட்டின் உத்தியோகபூர்வ மொழியான தமிழ் மொழி அக்கறை இன்மையால் தவிர்க்கப்படுகிறது?

ஒவ்வொரு முறையும், இதுபோன்ற தவறுகள் சமூக ஊடகங்களில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர்தான் சரி செய்யப்படுகிறது என்றால், அரசாங்கமும் அரச உத்தியோகத்தர்களும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

இந்த இடத்தில்தான், பாராளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற துறைமுக நகர் ஆணைக்குழு அமைப்பதற்கான சட்டமூலம் மீதான விவாதத்தில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பேசியது முக்கியத்துவம் பெறுகிறது. “தமிழ் மக்கள், ஏதோ ஒருவகையில் ஒரு சிறிதளவேனும் தன்னாட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதைத் தடுப்பதற்கு, எம்மை அழிக்கக் கூடத் துணிந்தீர்கள். அதற்கு, எம்மினத்தின் மீது இனவழிப்புச் செய்வதை, உங்கள் தெரிவாக எடுத்தீர்கள். ஆனால், இன்றைக்கு வேறு தேவைகளுக்காக, அதுபோன்ற ஓர் அலகை உருவாக்குவது தொடர்பில், உங்களிடம் எதுவித வெட்கமோ தயக்கமோ காணப்படவில்லை. புவிசார் அரசியலில் போட்டித் தரப்புகளில் ஒரு தரப்பினர், மேலாதிக்கம் பெறுவதற்கு வழிவகை செய்யும் வகையில், இதை மேற்கொள்கிறீர்கள். இதுதான் இந்த அவையின் இனவாதம். இதன் காரணமாகவே, நாங்கள் இந்தச் சட்டமூலத்தை எதிர்க்கிறோம். இன்று இங்கே நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்த முரண்நிலையை, இந்த அவலமான நிலைமையைச் சிங்கள மக்கள் உணர்ந்துகொள்வார்கள் என நாம் எதிர்பார்க்கிறோம்” என்று உரையாற்றினார்.

சீனாவை மகிழ்விக்க, இலங்கைக் குடிமக்கள் பேசாத மொழியான சீன மொழியை, இலங்கையில் பயன்படுத்தக் கூசாத அரசாங்கத்துக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும், தமிழ் மொழி மட்டும் மறக்கிறது என்றால், அது இனவாதம் அன்றி வேறென்ன?

சீனாவைப் பற்றிக் கொண்டுள்ள அக்கறையில், ஒரு துளியையேனும் இந்தநாட்டின் குடிமக்களான தமிழர்கள் மீது காட்டினால், இது போன்ற நிலைமை உருவாகாது. ஆனால், அதற்குத் தடையாக இருப்பது இனவாதமன்றி வேறு எதுவாக இருக்க முடியும்?

அன்று, தனிச்சிங்களச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய கொல்வின் ஆர் டீ சில்வா, “சமத்துவம்தான் எமது நாட்டின் சுதந்திரத்துக்கான பாதை; அதுவே ஒற்றுமையை ஏற்படுத்தும். எங்களுக்கு ஓர் அரசு வேண்டுமா, இல்லை இரண்டா? எமக்கு ஓர் இலங்கை வேண்டுமா, இல்லை இரண்டா? மொழிப் பிரச்சினை என்ற வெளித் தோற்றத்துக்குள் நாம் இந்தக் கேள்விகள் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் தமிழர்களை பிழையாக நடத்தினால், நீங்கள் தமிழர்களை துன்புறச்செய்தால், நீங்கள் தமிழர்களை அடக்கி ஆண்டால், நீங்கள் அடக்கியாளும் இனத்தவர்கள் வேறானதொரு தேசமாக உருவாகி இப்போதுள்ளதை விட அதிகமாக அவர்கள் கேட்கும் நிலை உருவாகும். நாம் சமத்துவத்தை மறந்து, தமிழர்களை அடக்கியாண்டால், பிரிவினையே உருவாகும்” எனச் சொன்ன தீர்க்க தரிசன வார்த்தைகள், இன்றும் பொருந்துகிறது என்றால், இந்த நாடு வரலாற்றிலிருந்து எதுவித பாடத்தையும் கற்றுக்கொள்ளவில்லை என்றே அர்த்தமாகிறது. அதுவே இந்த நாட்டின் சாபக்கேடுமாகும்.

## கடிதங்கள்

### கிருமிநாசினிகளின் விலையைக் குறைக்க கோரிக்கை

கிழக்கு மாகாணத்தில், வேளாண்மைச் செய்கை என்றும் இல்லாத வகையில், சிறப்பாக செழித்து வளர்ந்து வரும் நிலையில், கிருமிநாசினிகளின் தட்டுப்பாடு மாத்திரமல்லாது, பதிவு செய்யப்பட்ட விலையில், எதுவிதமான கழிவுகளும் இல்லாது, தனியார் விற்பனை நிலையங்களில், கொள்வனவு செய்ய வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உரமானியத்துக்காக விண்ணப்பித்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில், சில கமநல சேவைகள் நிலையங்களில் உரத்தைப் பெறுவதில் சிரமங்கள் நிலவுகிறது. யூரியாவை அதிக விலையில், தனியாரிடம் கொள்வனவு செய்வதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கம், இரசாயனக் கிருமிநாசினிகளை எதிர்காலத்தில் முற்றாகத் தடை செய்வதற்கு உத்தேசித்திருக்கும் நிலையில், தனியார் கடை உரிமையாளர்கள் கிருமிநாசினிகளை அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர். இதனால் விவசாயத்தை ஜீவனோபாயமாக மேற்கொள்ளும் பல குடும்பங்களின் நிலைமை கேள்விக்குறியாகி உள்ளது. விவசாய நடவடிக்கையை ஆரம்பித்து, இடைநடுவே அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டிருக்கும் அறிவித்தல், கீழ்த்தர வருமானம் பெறும் குடும்பங்களை வெகுவாக பாதித்துள்ளது.

விவசாயிகளின் நலன் கருதி அரசாங்கம், கிருமிநாசினியைப் பதிவு செய்யப்பட்ட விலையிலிருந்து கழிவு விலைக்கு, தனியார் உரிமையாளர்கள் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கையை முன்வைக்கின்றனர்.

இ. சுதாகரன்

SSC டெனிஸ் திறந்த சம்பியன்ஷிப் போட்டிகளின்

# ஊட்டச்சத்து பங்காளராக CBL Nutriline

CBL Nutriline, 123வது SSC டெனிஸ் திறந்த சம்பியன்ஷிப் போட்டியில் ஊட்டச்சத்துப் பங்காளராக கைகோர்த்து அனுசரணை வழங்கியிருந்தது.

அண்மையில் பூர்த்தியடைந்த இந்தச் சுற்றுப்போட்டியில் 800ற்கும் அதிகமானவர்கள் பங்கேற்றிருந்தனர். 2021ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதலாவது பாரிய சம்பியன்ஷிப் போட்டியாக இது அமைந்திருந்தது. SSC இன் டெனிஸ் ஹவுஸ் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சுற்றுப்போட்டி ஸ்ரீ லங்கா டெனிஸ் சம்மேளனத்தின் கண்காணிப்பின் கீழ் சிங்களீஸ் ஸ்போட்ஸ் க்ளப் (SSC) டெனிஸ் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.




ஊட்டச்சத்து மிக்க காலை உணவின் மதிப்பை வென்ற CBL Nutriline இந்த வருடத்தின் சுற்றுப்போட்டியில் ஊட்டச்சத்துப் பங்காளராக இணைந்ததையிட்டு பெருமை கொள்கிறது. ஆரோக்கியமான தானியங்களின் சிறந்த சுவையால் நன்கு அறியப்பட்ட CBL Nutriline, வளர்ந்து வரும் குழந்தைகளின் ஊட்டச்சத்துத் தேவைக்கு உள்நாட்டில் வளர்க்கப்படும் பல தானியங்களை மாத்திரமே பயன்படுத்தி வருகிறது.

சுற்றுப்போட்டி தொடர்பில் கருத்துத் தெரிவித்த CBL இன் உணவுக் கொத்தணியின் பிரதம நிறைவேற்று அதிகாரி திலங்க டி சொய்சா குறிப்பிடுகையில், “இளம் விளையாட்டு வீரர்களின் நாளாந்த வாழ்க்கையில் ஊட்டச்சத்து மிகவும் முக்கியமான காரணியாகும். இதனை அடையாளம் கண்டு, இந்தத் திறமை மிக்க விளையாட்டு வீரர்களின் பயணத்தைப் பலப்படுத்தவும் ஊக்குவிக்கவும் CBL Nutriline ஊட்டச்சத்துப் பங்காளராக இணைந்துள்ளது” என்றார்.

இந்தச் சுற்றுப்போட்டி கனிஷ்ட பிரிவு (12 வயதுக்கு கீழ் மற்றும் மேல்) திறந்த மற்றும் சிரேஷ்ட பிரிவு என மூன்று பிரிவுகளை உள்ளடக்கியிருந்தது. பெண்கள் ஒற்றையர் பிரிவில் சவினி ஜயசூரிய வெற்றிபெற்றதுடன், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் லூகா நீசி வெற்றிபெற்றார்.

சரியான ஊட்டச்சத்து, முறையான உணவுப் பழக்கத்தின் முக்கியத்துவம், உரிய ஊட்டச்சத்துத் தெரிவுடன் வீரர்கள் விளையாட்டில் ஈடுபடுவது ஆகியவற்றை ஊக்குவிக்கும் நோக்கில் அதிகாரிகள் மற்றும் பங்குபற்றுநர்களுடன் CBL Nutriline இணைந்து செயற்பட்டது.

SLT–MOBITEL இடமிருந்து

# Anytime Unlimited Internet வசதி

தேசிய தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் மொபைல் சேவைகள் வழங்குநரான SLT-MOBITEL, சந்தையில் புதிய Unlimited AnyTime internet அறிமுகம் செய்துள்ளது. முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு நிலையான மற்றும் மொபைல் வாடிக்கையாளர்களுக்காக இந்த சேவைகளை வழங்கியுள்ளது.

வாடிக்கையாளர்கள் தாம் பணியாற்றும் முறை, அவர்கள் முன்னெடுக்கும் வாழ்க்கை முறை என்பவற்றுக்கமைய அவர்களின் டேட்டா தேவை அதிகரிக்கவுள்ளது என்பதை SLT-MOBITEL புரிந்து கொண்டுள்ளது. Unlimited AnyTime internet பக்கேஜ்களினூடாக டிஜிட்டல் செயற்பாட்டாளர்கள், வியாபார நிபுணர்கள், தொழில்முயற்சியாளர்கள் மற்றும் விற்பனைத் துறையைச் சேர்ந்தவர்கள் எனப் பரந்தளவு வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு சேவைகளை வழங்கும் வகையில் அமைந்துள்ளது.




சகல முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கும் தமது தேவைகளின் பிரகாரம் தற்போது பரந்தளவு ப்ளான்களை தெரிவு செய்து கொள்ள முடியும். மொபைல் மற்றும் புரோட்பான்ட் பாவனையாளர்களுக்கும் unlimited internet பக்கேஜ்களை செல்லுபடியாகும் காலம், bandwidth போன்றவற்றின் பிரகாரம் பெற்றுக் கொள்ளும் வசதி காணப்படுகின்றது. இதனூடாக அவர்களுக்கு சகாயமான, வரையறையற்ற டேட்டாவை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

SLT 4G LTE, ADSL Home Broadband மற்றும் Fiber பக்கேஜ்களை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு மாறிக் கொள்வதற்காக அவர்களுக்கு பொருத்தமான bandwidth தெரிவுகளை மேற்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய வாடிக்கையாளர்களுக்கு இந்தச் சலுகையைப் பயன்படுத்தி புதிய இணைப்புகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கேமிங், ஸ்ட்ரீமிங்கிற்கான டேட்டா, அப்லோட் செய்வது, டவுன்லோட் செய்வது, Vlogging, blogging அல்லது virtual reality என அனைத்துக்கும் SLT-MOBITEL இன் Unlimited AnyTime Data பக்கேஜ்களுடன் வாடிக்கையாளர்களுக்கு தமது சாதனங்களை டேட்டா தீர்ந்துவிடும் எனும் அச்சத்துடன் பயன்படுத்த வேண்டியதில்லை. வாடிக்கையாளர்களுக்கு உயர் தரம் வாய்ந்த அனுபவம், பெறுமதி மற்றும் நெகிழ்ச்சித் தன்மை ஆகியவற்றை பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்த பக்கேஜ்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், நாட்டை டிஜிட்டல் யுகத்துக்கு நகர்த்துவதாக அமைந்துள்ளது.

சிரேஷ்ட பிரஜைகளுக்கு

# ‘செலான் ஹரசர’

## கணக்கு மீள அறிமுகம்

சிரேஷ்ட பிரஜைகளுக்கும், ஓய்வூதியம் பெறுவோருக்கும் விசேட அனுகூலங்கள் மற்றும் நிதியியல் தீர்வுகளை வழங்கும் கணக்கான ‘செலான் ஹரசர’ கணக்கை புதிய அம்சங்களுடன் மீள அறிமுகம் செய்யதுள்ளது.

சிரேஷ்ட பிரஜைகளுக்கு காணப்பட வேண்டிய நிதிச் சுதந்திரம் மற்றும் உறுதித் தன்மையை புரிந்து கொண்டு சமூகத்தில் அவர்கள் ஆற்றும் முக்கியமான பங்களிப்பை கவனத்தில் கொண்டும், செலான் வங்கி தனது ஹரசர கணக்கை பல பெறுமதி சேர்க்கப்பட்ட அம்சங்கள் மற்றும் சேவைகளுடன் மீள அறிமுகம் செய்துள்ளது. செலான் ஹரசர என்பது ஒரு சாதாரண சேமிப்புக் கணக்கைவிட சிறந்ததாகவும், நபர் ஒருவர் ஓய்வு பெறும் வயதை எய்தியதும், நிதிச் சுதந்திரத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவச் செலவுகள் பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகின்றன. இது பல சிரேஷ்ட பிரஜைகளுக்கு பெரும் சுமையாக அமைந்துள்ளது.

SEYLAN Harasara SENIOR CITIZENS FINANCIAL SOLUTIONS

செலான் ஹரசர சிரேஷ்ட பிரஜைகள் கணக்கினூடாக, அவர்களுக்கு ஏற்படும் பொதுச் சத்திர சிகிச்சைகளுக்கான ரூ. 200,000 வரையான செலவை மீளப் பெற முடியும் என்பதுடன், வில்லைகள் மற்றும் விழிவெண்படல சீராக்க சத்திரசிகிச்சைக்கான சாதனங்களுக்கு ஏற்படும் செலவுகளை மீளப் பெற முடியும். மேலும், இலவசமாக வருடாந்த மருத்துவ வெகுமதிகளையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். செலான் ஹாரசார டெபிட் அட்டையினூடாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு, தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகள், மருத்துவ ஆய்வுகூடங்களில் 20 சதவீதம் வரை, மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையங்களிலிருந்து 25 சதவீதம் வரை, புத்தக விற்பனை நிலையங்களிலிருந்து 15 சதவீதம் மற்றும் ஒன்லைன் பார்மசிகளில் 10 சதவீதம் வரை பிரத்தியேகமான விலைக்கழிவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். ஹாரசார கணக்குதாரர்களுக்கு நாடு முழுவதையும் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட விற்பனை நிலையங்களிலிருந்து கவர்ச்சிகரமான விலைக்கழிவுகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படி சலுகைகளுக்கு மேலதிகமாக, ஓய்வூதியம் பெறுவோருக்கு ரூ. 5 மில்லியன் வரை விசேட வட்டி வீதங்களில் ஓய்வூதியக் கடன்களுக்கு விண்ணப்பிக்க முடியும். தமது ஓய்வூதியத்தை செலான் வங்கிக்கு மாற்றும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்பாக ரூ. 5,000 வரை பாவனைக் கட்டணப்பட்டியல் கொடுப்பனவுகளுக்கான மீளளிப்புகளும் வழங்கப்படும். ஹாரசார கணக்குதாரர்கள் தமது 60 வயது பூர்த்தியை கொண்டாடும் போது செலான் வங்கியிடமிருந்து விசேட வெகுமதியையும் பெற்றுக் கொள்வார்கள்.

அஹமதாபாத்


# குஜராத்தில் கட்டாய மதமாற்றச் சட்டம்

## ஆளுநர் ஒப்புதல்

கட்டாய மதமாற்ற தடைச் சட்டத்துக்கு குஜராத் மாநில ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார். திருமணம் செய்வதற்காக பெண்களை கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்வதைத் தடுக்கும் வகையில் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்படி சட்டத்தை மீறியோருக்கு 10ஆண்டுகள் சிறை, ரூ. 50 ஆயிரம் வரை அபராதம் விதிக்க முடியும்.

குஜராத் மதச் சுதந்திர சட்டமூலம் -2021 தயார் செய்யப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டமூலத்தின்படி, ஒருவரைக் கட்டாயமாக மதம் மாற்றினாலோ அல்லது கட்டாயமாக மதம் மாற்றுவதற்கு துணை புரிந்தாலோ குற்றம் சாட்டப்பட்ட அந்த நபருக்கு 5 ஆண்டு வரை சிறைத் தண்டனை, ரூ.2 இலட்சம் அபராதம் என்பன விதிக்கப்படும்.

பாதிக்கப்பட்டவர் 18 வயதுக்கு உட்பட்டவராக இருந்தாலோ, தலித், பழங்குடியினத்தைச் சேர்ந்தவராக இருந்தாலோ, குற்றம் சாட்டப்பட்டவருக்கு 7 ஆண்டு வரை சிறைத் தண்டனையும், ரூ.3 இலட்சம் அபராதமும் விதிக்கப்படும்.ஓர் அமைப்பு இந்தக் குற்றத்தைப் புரிந்தால், அந்த அமைப்பின் பொறுப்பாளருக்கு 10 ஆண்டு வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.



விரைவில் லவ் ஜிகாத்துக்கு எதிரான சட்டத்தை பேரவையில் கொண்டு வரவுள்ளோம் என்று அமைச்சர் பூபேந்திர சிங் சுதாசமா தெரிவித்துள்ளார்.

அஹமதாபாத்

சென்னை

# சாமியார் பாபா ராம்தேவுக்கு கடிதம்



பதஞ்சலி நிறுவனத்தின் நிறுவனரும் சாமியாருமான பாபா ராம்தேவ் “இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சை அல்லது ஒட்சிசன் கிடைக்காமல் இறந்தவர்களைவிட அலோபதி மருந்துகளால்தான் அதிகம் பேர் இறந்தனர்; அலோபதி மருத்துவ முறை அறிவிலித்தனமானது, காலாவதியானது” என்று கூறும் காணொளி ஒன்று சமீபத்தில் சமூக ஊடகங்களில் மிகவும் பரவலாகி வருகிறது. இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள இந்திய மருத்துவ சங்கம், தாம் கூறிய கருத்தை, சாமியார் ராம்தேவ், திரும்பப் பெற வேண்டும் என்றும் அதற்காக எழுத்துபூர்வமாக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் அவருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

இந்தியாவின் மிகப்பெரிய மருத்துவ அமைப்பான இந்திய மருத்துவ சங்கத்தின் 3.5 இலட்சம் மருத்துவர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இதுமட்டுமல்லாமல், ஃபெடரேஷன் ஒப் ஓல் இந்தியா மெடிகல் அசோஷியேஷன் எனும் அமைப்பும் அவருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

பெங்களூர்

# இந்துமத இறுதிச் சடங்கை நிறைவேற்றிய முஸ்லிம் எம்.பி

சென்னை பேராசிரியர் சாவித்ரி விஸ்வநாதன் (80) கொரோனா தொற்றுக்காரணமாக உயிரிழந்தார். இவர், புதுடெல்லி பல்கலைக்கழகத்தின் ஜப்பானிய மொழித்துறை தலைவராகப் பணியாற்றியவர்.

இவர்,பெங்களூரில் தனது தங்கை மஹாலட்சுமியுடன் வசித்துவந்துள்ளார். இதையடுத்து நண்பர்களின் உதவியோடு அவரது உடல் மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. சாவித்ரி விஸ்வநாதனின் அஸ்தியை கர்நாடகாவைச் சேர்ந்த காங்கிரஸ் ராஜ்யசபா எம். பி. செய்யத் நசீர் ஹூசைன் ஸ்ரீரங்கப்பட்டினத்திலுள்ள காவிரி ஆற்றில் கரைத்தார். இதில் அவரது மனைவி மற்றும் மகன்களும் பங்கேற்று இறுதிச் சடங்குகளை நிறைவேற்றினர்.

இதுகுறித்து காங்கிரஸ் எம். பி. செய்யத் நசீர் ஹூசைன் கூறும்போது, “புதுடெல்லி பல்கலைக்கழகத்தில் நான் பணியாற்றிய போது சாவித்ரி விஸ்வநாதன் அறிமுகமானார். எனது குடும்ப நண்பர் என்பதைக் காட்டிலும் ஒரு தாயை போன்றவர். அவரது தங்கைக்கும் கொரோனா பாதிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில்



அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்போது ஊரடங்கு அமுலில் இருப்பதால் உறவினர்கள் வெளியூரில் இருந்து வர முடியாமல் போய்விட்டது. இஸ்லாமியனாகிய நான் அஸ்தியை கரைத்து இறுதி சடங்குகளை செய்யட்டுமா? அதில் எதுவும் சிக்கல் இருக்கிறதா என அவரது தங்கையிடமும், இந்துமத குருக்களிடமும் கேட்டேன். இருவரும் சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்து, எனது குடும்பத்தாருடன் ஸ்ரீரங்கப்பட்டினத்துக்கு வந்து சாவித்ரி விஸ்வநாதனுக்கு இந்துமுறைப்படி திதி கொடுத்து பூஜைகள் மேற்கொண்டேன். இதனால் அவரது குடும்பத்தினர் மட்டுமல்லாமல் நாங்களும் மிகுந்த மகிழ்ச்சியோடும் உணர்ச்சி பெருக்கோடும் இருக்கிறோம்” என்றார்.

இராய்ப்பூர்

# மன்னிப்புக் கேட்ட ஆளுநர் பதவி நீக்கம்

சத்தீஸ்கர் மாநிலத்தில் ஊரடங்கு சமயத்தில் மருந்து வாங்க வந்த நபரை சூரஜ்பூர் மாவட்ட ஆளுநரும் பொலிஸாரும் இணைந்து தாக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மருந்துக் கடைக்குச் சென்ற வாலிபரின் வாகனத்தை பொலிஸார் மறித்து விசாரித்தபோது, வாகனத்தின் ஆவணங்களை காட்டினார். அப்போது மாவட்ட ஆளுநர் ரன்பீர் சர்மா, வாலிபரின் அலைபேசியைப் பறித்து, கீழே போட்டு காலால் உடைத்தார். பிறகு அவரைக் கன்னத்திலும் அறைந்தார்.

இதையடுத்து அங்கிருந்த பொலிஸாரும் வாலிபரைதத் தாக்கியுள்ளனர். இந்தக் காட்சியை ஒருவர் அலைபேசியில் வீடியோ எடுத்து வெளியிட்டுள்ளார். இந்த வீடியோ இணையத்தில் வைரலானது. பலரும் ஆளுநருக்கு கண்டனம் தெரிவித்தனர்.

இதையடுத்து தனது செயலுக்காக மாவட்ட ஆளுநர் மன்னிப்பு கோரியுள்ளார்.




அந்த வாலிபர் தவறாக நடந்துகொண்டதால் அறைந்ததாக கூறி உள்ளார். எனினும், ஆளுநரின் அத்துமீறிய செயலுக்காக அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சென்னை

# பழனிசாமி பற்றி வலைதளங்களில் அவதூறு

அண்ணா திராவிட முன்னேற்ற கழக தலைவர் முன்னாள் முதலமைச்சர் பழனிசாமி குறித்து சமூக வலைதளங்களில் அவதூறு கருத்துகளை பரப்புபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை பொலிஸ் ஆணையரிடம் அ.தி. மு.க வழக்கறிஞர் குழுவினர் புகார் கொடுத்துள்ளனர்.

சென்னை வேப்பேரி பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் அ.தி. மு.க வழக்கறிஞர் குழுவினரால் கொடுக்கப்பட்ட புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சி அ.தி.மு.க தலைவர் பழனிசாமி குறித்து ஆதாரமற்ற தகவல்களை சமூக வலைதளங்களில் சிலர் பரப்பி வருகின்றனர். ஒரு தனியார் தொலைக்காட்சியில் வந்த தகவல் என கடந்த சில நாள்களாக ஒரு தகவல் பரப்பப்பட்டு வருகிறது.

அதில், ‘முதலமைச்சருக்கு எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை என்ற தலைப்பில், நாங்கள் தாயில்லாத பிள்ளைகள். எங்கள் மீது ஊழல் வழக்குகள் போடுவதை முதலமைச்சர் ஸ்டாலின் தவிர்க்க



வேண்டும்’ என்று கூறப்பட்டுள்ளது.

உண்மையில் எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி அப்படி எங்கேயும் கூறவில்லை. ஆனால், வேண்டுமென்றே திட்டமிட்டு இப்படி ஓர் அவதூறுத் தகவல் பரப்பப்பட்டு வருகிறது. இவ்வாறு அவதூறு கருத்துகளைப் பரப்பி வரும் நபர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் மீது தகவல் தொடர்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு புகாரில் கூறப்பட்டுள்ளது.

சென்னை

தி பேமிலிமேன் 2;

# தடை செய்யத் தமிழகத்தில் குரல்



சமந்தா முதன்முறையாக ஹிந்தியில் நடித்துள்ள ‘தி பேமிலிமேன் 2’ இணைய வெளியீடு, தமிழர்களையும் விடுதலை புலிகளையும் தவறாகச் சித்திரித்துள்ளதாகக் கூறி, அந்தத் தொடரைத் தடை செய்ய வேண்டும் என் தமிழகத்தில் எதிர்ப்பு குரல் எழும்பி உள்ளது.

ராஜ் - டிகே இயக்கத்தில் மனோஜ் பாஜ்பாய், பிரியாமணி, சமந்தா நடித்துள்ள ஹிந்தி வெப்சீரிஸான ‘தி பேமிலி மேன்2’ விரைவில் அமேசான் ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளது. அதில் தமிழ் பேசும் சமந்தாவை பயங்கரவாதி போலவும், பாகிஸ்தான் பயங்கரவாதிகளுடன் தொடர்பு போலவும் காட்டியுள்ளனர். குறிப்பாக தமிழர்களைப் பயங்கரவாதிகளாக சித்திரித்துள்ளதாகப் புகார் எழுந்துள்ளது. டுவிட்டரில் கண்டனங்கள் எழுந்தன.

கொ.ஜ. குடியரசு

கிழக்கு கொங்கோவில்

# எரிமலை வெடித்தது

## கோமாவில் ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்

கிழக்கு கொங்கோ ஜனநாயகக் குடியரசின் பிரதான நகரான கோமாவின் விமான நிலையத்தை, நைரகொங்கோ எரிமலை வெடிப்பில் இருந்தான நெருப்புக் குழம்பானது நேற்று முன்தினம் இரவு அணுகின்றது.

இந்நிலையில், அங்கு வசிப்பவர்களை வெளியேறுமாறு அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

அந்தவகையில், ஆயிரக்கணக்கான கோமா வாசிகள் கால்நடையாக மெத்தைகளையும்



ஏனைய உடைமைகளையும் காவியவாறு நகரத்தை விட்டு வெளியேறுவதோடு, பெரும்பாலோனோர் ருவாண்டாவுடனான முன்னரங்கு நோக்கிச் செல்கின்றனர்.

குறித்த எரிமலையானது இறுதியாக கடந்த 2002ஆம் ஆண்டு வெடித்த நிலையில் 250 பேர் கொல்லப்பட்டதுடன், 120,000 பேர் வீடற்றவர்களாகி இருந்தனர். மிகவும் செயற்பாட்டு நிலையிலுள்ள எரிமலையொன்றாக குறித்த எரிமலை காணப்படுகின்றது.

இந்நிலையில், 3,500க்கும் அதிகமான கொங்கோலியர்கள் எல்லையைக் கடந்ததாக அவசரநிலை முகாமைத்துவத்துக்கு பொறுப்பான ருவாண்டா அமைச்சு தெரிவித்துள்ளது.



## காட்டுத்தீயுடன் போராட்டம்...

கிரேக்கத் தலைநகர் ஏதென்ஸுக்கு மேற்காக மூன்றாவது நாளாக நூற்றுக்கணக்கான தீயணைப்புப்படைவீரர்கள் காட்டுத்தீயுடன் போராடி வருகின்றனர்.

இலங்கைக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# 257 ஓட்டங்களைப் பெற்ற பங்களாதேஷ்

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே மிர்பூரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷின் அணித்தலைவர் தமிம் இக்பால், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், ஆரம்பத்திலேயே லிட்டன் தாஸை துஷ்மந்த சமீரவை ஆரம்பத்திலேயே இழந்தது. எனினும் அடுத்து ஜோடி சேர்ந்த தமிம் இக்பாலும், ஷகிப் அல் ஹஸனும் இனிங்ஸை கட்டியெழுப்பிய நிலையில், குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் தனுஷ்க குணதிலகவிடம் ஷகிப் அல் ஹஸன் வீழ்ந்தார்.

இதைத் தொடர்ந்து தமிம் இக்பாலும், முஷ்பிக்கூர் ரஹீமும் இனிங்ஸை நகர்த்திச் சென்ற நிலையில், 52 (70) ஓட்டங்களுடன் தனஞ்சய டி சில்வாவிடம் தமிம்



இக்பால் வீழ்ந்ததோடு, தொடர்ந்து வந்த மொஹமட் மிதுனும் உடனே ஓட்டமெதுவும் பெறாமலேயே தனஞ்சய டி சில்வாவிடம் வீழ்ந்தார்.

இந்நிலையில், முஷ்பிக்கூர் ரஹீமும், தொடர்ந்து வந்த மகமதுல்லாவும் பங்களாதேஷை சிறப்பான நிலைக்கு நகர்த்திய நிலையில், 84 (87) ஓட்டங்களுடன் ரஹீமும், 54 (76) ஓட்டங்களுடன் மகமதுல்லாவும் லக்ஷன் சந்தகான், தனஞ்சய டி சில்வாவிடம் வீழ்ந்தனர்.

இறுதியில், அஃபிஃப் ஹொஸைனின் ஆட்டமிழக்காத 27 (22), மொஹமட் சைஃபுடீனின் ஆட்டமிழக்காத 13 (09) ஓட்டங்களுடன் 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 257 ஓட்டங்களை பங்களாதேஷ் பெற்றது.


பிரேஸில்

கொவிட்–19 சுகாதார விதிகளை மீறியமைக்காக

# ஜனாதிபதிக்கு தண்டம்

பிரேஸிலின் மரன்ஹாவோ மாநிலத்தில் பொது நிகழ்வொன்றில் பொதுச் சுகாதார ஒழுங்குகளை கடைப்பிடிக்கத் தவறியமை காரணமாக அந்நாட்டு ஜனாதிபதி ஜைர் பொல்ஸோனரோவுக்கு தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

எந்தவித சுகாதார நடைமுறைகளையும் இல்லாமல் மரன்ஹாவோவில் ஒன்றுகூடல்களை முன்னெடுத்ததுக்காக ஜனாதிபதி பொல்ஸோனரோவுக்கெதிராக சுகாதார அதிகாரிகள் வழக்கைப் பதிவு செய்துள்ளதாக குறித்த மாநில ஆளுநர் பிளாவியோ டினோ



கடந்த வெள்ளிக்கிழமையிரவு தெரிவித்துள்ளார்.

மேன்முறையீடு செய்வதற்கு ஜனாதிபதி அலுவலகத்துக்கு 15 நாள்கள் இருக்கின்ற நிலையில், அதன் பின்னரே எவ்வளவு தண்டமென்பது தீர்மானிக்கப்படுமென்பது குறிப்பிடத்தக்கது.

ஐ. அமெரிக்கா

சல்மொனெல்லா பரவலுக்கு மத்தியில்

# 'கோழிகளை கொஞ்ச வேண்டாம்'



சல்மொனெல்லா பரவலுக்கு மத்தியில், கோழிகளைக் கொஞ்சுவதிலிருந்து விலகியிருக்குமாறு மக்களை, நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு ஐக்கிய அமெரிக்க நிலையங்கள் வலியுறுத்தியுள்ளன. ஐ. அமெரிக்காவின் 43 மாநிலங்களில் 163 பேர் சுகவீனமடைந்ததையடுத்து சல்மொனெல்லா பரவலை குறித்த நிலையங்களின், சுகாதார அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். தொற்றுக் காரணமாக காய்ச்சல், வயிற்றுப்போக்கு, வயிறு நோவு, வாந்தி ஏற்படலாமென்பது குறிப்பிடத்தக்கது.



மோசமான வானிலை

# மரதனோட்டத்தில் 21 பேர் பலி

வடமேற்கு சீனாவிலுள்ள கன்சு மாகாணத்தில் தீவிரமான குளிர் வானிலையானது மரதனோட்டத்தைத் தாக்கிய நிலையில் 21 பேர் கொல்லப்பட்டதாக அந்நாட்டு அரச ஊடகம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

இம்மரதனோட்டமானது நேற்று முன்தினம் காலையில் ஆரம்பித்திருந்ததுடன், அன்று மதியம் மலைப் பகுதியூடாகச் செல்லும்போது மழையை எதிர்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாரிய மீட்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு 1,200க்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் தரையிறக்கப்பட்டதாக ஸின்குவா தெரிவித்துள்ளது. மோசமான வானிலையையடுத்த நிலச்சரிவொன்றால் மீட்புப் பணி பாதிக்கபட்டதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பந்தயத்தில் மொத்தம் 172 பேர் பங்கேற்ற நிலையில், 151 பேர் பாதுகாப்பாக இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# ஷிரானுக்கு கொவிட்19 தொற்று

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்காக பங்களாதேஷ் சென்றுள்ள இலங்கைக் குழாமில் இடம்பெற்றுள்ள அறிமுக வேகப்பந்துவீச்சாளர் ஷிரான் பெர்ணான்டோவுக்கு கொவிட்19 தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஷிரான் பெர்ணான்டோ எவ்விதக் குணங்குறிகளையும் காண்பிக்கவில்லையென அறியப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் இலங்கையணியின் வேகப்பந்துவீச்சுப் பயிற்சியாளர் சமிந்த வாஸ், வேகப்பந்துவீச்சாளர் இசுரு உதானவும் கொவிட்19-



தொற்றுக்குள்ளாகியதாக காண்பிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் இவர்களுக்கு கொவிட்19-தொற்று இல்லை எனத் தெரிய வந்துள்ளது.

சீனா



# செவ்வாயில் முதல் சீன விண்கலம்

செவ்வாயில் தரையிறங்கிய சீன விண்கலத்திலிருந்து, தொலைநோக்கியால் இயக்கப்படும் மோட்டாரால் பயணிக்கும் றோவரானது செவ்வாயின் மேற்பரப்பில் நேற்று முன்தினம் பயணித்திருந்தது.

குறித்த விண்கலமானது செவ்வாயின் மண், வளிமண்டலம் குறித்து ஆராயவுள்ளது. சூரிய சக்தியால் இயங்கும் விண்கலமானது முன்னைய உயிர்கள், தண்ணீர், ஐஸ் ஏதாவது இருக்கின்றனவா என்பது குறித்தும் தனது 90 நாள்கள் நடவடிக்கையில் ஆராயவுள்ளது.

லெபனான்

ஜனாதிபதியின் விருப்பத்துக்கு

# 'அமைச்சரவை அமைக்க முடியாது'

லெபனான் ஜனாதிபதி மிஷெல் ஆவோனின் விருப்பத்தை பூர்த்தி செய்வதற்காக அமைச்சரவையொன்றைத் தான் அமைக்க மாட்டேன் என அந்நாட்டின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சாட் அல்-ஹரிரி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியோ அல்லது எந்தவொரு அரசியல் பிரிவு விரும்புவதற்காக அரசாங்கமொன்றை அமைக்க மாட்டேன் எனத் தெரிவித்த ஹரிரி, தகருவதைத் தடுக்கும், லெபனானை அச்சுறுத்தும் பாரிய பின்னடைவைத் தடுக்கும் அரசாங்கத்தையே தான் அமைப்பேன் என பாராளுமன்ற அமர்வொன்றில் கூறியுள்ளார்.





ஜேர்மனிய புண்டெஸ்லீகா தொடர்:

# யூனியன் பேர்லினிடம் தோற்ற லெய்ப்ஸிக்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெஸ்லீகா தொடரில், யூனியன் பேர்லினின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 1-2 என்ற கோல் கணக்கில் ஆர்.பி லெய்ப்ஸிக் தோற்றது.

லெய்ப்ஸிக் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜஸ்டின் க்ளுய்வேர்ட் பெற்றதோடு, யூனியன் பேர்லின் சார்பாக, மர்வின் பிறைட்றிச், மக்ஸ் க்றூஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, வொல்வ்ஸ்பேர்க்கின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், மைன்ஸுக்குமிடையிலான போட்டியில், 2-3 என்ற கோல் கணக்கில் வொல்வ்ஸ்பேர்க் தோற்றது. வொல்வ்ஸ்பேர்க் சார்பாக, மக்ஸிமில்லியன் பிலிப், ஜோவோ விக்டர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். மைன்ஸ் சார்பாக, ஜீன்-போல் பொய்டஸ், றொபின் குவைஸன், ஸ்டெஃபன் பெல் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், பொரூசியா டொட்டமுண்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், பெயார் லெவர்குசனுக்குமிடையிலான போட்டியில், 3-1 என்ற கோல் கணக்கில் டொட்டமுண்ட் வென்றது. டொட்டமுண்ட் சார்பாக, எர்லிங் பிறோட் ஹலான்ட் இரண்டு கோல்களையும், மார்கோ றொய்ஸ் ஒரு கோலையும் பெற்றனர். லெவர்குசன் சார்பாகப் பெறப்பட்ட கோலை லார்ஸ் பென்டர் பெற்றிருந்தார்.



ஸ்பானிய லா லிகா தொடர்:

# சம்பியனான அத்லெட்டிகோ

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில் அத்லெட்டிகோ மட்ரிட் சம்பியனாகியுள்ளது. றியல் வல்லடொலிட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றதைத் தொடர்ந்தே அத்லெட்டிகோ சம்பியனாயிருந்தது. குறித்த போட்டியில் வெற்றியுடன் லா லிகா புள்ளிகள் பட்டியலில் 86 புள்ளிகளை அத்லெட்டிகோ அடைந்த நிலையில், இரண்டாமிடத்திலுள்ள றியல் மட்ரிட் 84 புள்ளிகளையே பெற்றிருந்தது. இப்போட்டியில் அத்லெட்டிகோ சார்பாக, ஏஞ்சல் கொரேரா, லூயிஸ் சுவாரஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, வல்லடொலிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஒஸ்கார் பிளானோ பெற்றிருந்தார்.

ஐ.அ. அமீரகம்

மாதக்கணக்காக அறியப்படாத

# டுபாய் ஆட்சியாளரின் மகளின் புகைப்படம்

மாதக் கணக்காக அறியப்படாத டுபாய் ஆட்சியாளரின் மகளான இளவரசி லத்தீபாவைக் காண்பிக்கும் புகைப்படமொன்று, இரண்டு இன்ஸ்டாகிராம் கணக்குகளில் கடந்த வாரம் வெளியாகியுள்ளது.

இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில், இரகசியக் காணொளியொன்றில் தான் பணயக்கைதியாக இருப்பதாகவும், உயிருக்கு அஞ்சுவதாகவும் லத்தீபா தெரிவித்திருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் திங்கட்கிழமை, 24 மே 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.